உதயம் 10 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2011

ஆசிரியர்:
Dr. S. ராம் மோஹன்

இணை ஆசிரியர்:
தியாகராஜன்

ஆலோசகர்கள்: ஏ.வி. சுப்ரமணியன், ஜா.ஜயராமன்,
சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டுச் சந்தா : ரூ. 75 ஆயுள் சந்தா : ரூ. 1500

காசோலை/மணியார்டர் ரமண கேந்திரா டிரஸ்ட் என்ற பெயரில் எடுத்து 20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:
குமார் ராஜா : 9444261296
மின்னஞ்சல்: **arunamramanam@gmail.com**

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
**A.** குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்,
20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

## ஜயந்தி இதழ், ஜனவரி 2011


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | "நான் யார் தெரியுமா?" விலிருந்து "நான் யார்?" வரை | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 16 |
| 3 | செவியமுதம் | வஸந்தா ராகவன் | 23 |
| 4 | அருணை ரமணன் அருட்பதம் பணிவோம் | ராம்மோஹன் | 30 |
| 5 | ரிபு கீதை | தியாகராஜன் | 32 |
| 6 | பகவானின் பக்தருள் - நடேச அய்யர் | டாக்டர் நிரஞ்சன் | 38 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 44 |
| 8 | மனம் - இயக்கமும் அடக்கமும் | டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் | 45 |
| 9 | வாழ்வழி காட்டும் வடமொழி இலக்கியங்கள் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 52 |
| 10 | சிவானந்த லஹரி | அ.வெ.சுகவனேஸ்வரன் | 59 |
| 11 | ரமண வழித்தலங்கள் | | 64 |
| 12 | செய்திகள் | | 73 |

## ஆசிரியர் உரை

# "யாதெனின் யாதெனின் நீங்கியான்..."

நமது கேந்திர நிகழ்ச்சி ஒன்றில் அன்பர் ஒருவர், என்னிடம் வினவினார். "பரமாத்மா அகண்டாகார வஸ்து, எல்லையற்ற ஒன்று என்று ஞானிகள் கூறுகிறார்களே! அப்படியானால் அதை நாம் எப்படி உணர முடியும்? இறைவனைப் பார்த்துள்ளார்கள் என்கிறார்களே! அப்படிப் பார்க்க முடியுமா?"

ஒருவன் நீண்ட நாள் சிறையில் அடைபட்டிருந்தான். அங்கே அவன் அறையில் ஒரு சிறிய சன்னல் மட்டுமே இருந்தது. அதன் வழியே வெளியே தெரியும் சிறிய இடைவெளியில் சில மரங்களையும், வானின் சிறு பகுதியை மட்டுமே அவன் அதுகாறும் கண்டிருந்தான். சிற்றறையில் அடைபட்டிருந்த அவனுக்கு உலகம் சன்னல் அளவு மாத்திரமே. அகண்டமான அண்டத்தை அவன் கண்டமாகக் கண்டான். சில நாட்கள் கழிந்து வெளியே வந்தான். எல்லையற்ற வானம், அவன் கண் முன்னே விரிந்தது கண்டு மிகவும் ஆனந்தப்பட்டான். சிற்றறையில் அடைபட்டிருந்தவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. காவலாளி சன்னலைத் திறந்துவிட்டபோது, சன்னல் அளவுக்கு உலகம் விரிந்தது. அதைப் போலவே அறநூல்களைப் படிக்கும் போதும், சத்சங்கங்களிலும், உள்ள சன்னல் திறக்கிறது. அது வழியே பார்க்கும் போது பரம்பொருளைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்கிறோம்.

அகண்டமாகிய பரம்பொருளின் ஒரு பகுதியே உள்ளேயும் இருக்கிறது என்பதை அவன் உணர்கிறான். ஒரு நல்ல வழக்கறிஞரின் துணையால் அவன் சிறையைவிட்டு வெளியே வரும்போது பரந்த வெளியை கண்பார்வை விரியும் வரை பார்க்கின்றான். அதுவே அவனது விரிந்த எல்லை. இதுவரை அவனது பார்வைக்குத் தடையாய் இருந்த சிறைச் சுவர்கள் நீங்கிய பின்னர், பரந்த வெளியும், பலமரங்களும் தெரிகின்றன. அறையை விட்டு வெளியே வந்தவனுக்கு அகண்டமான உலகம் எப்படி அவன் கண்களின் எல்லைக்கு எட்டியவரை தெரிந்ததோ, அதே போல் பிரபஞ்சக் கட்டினை விட்டு வெளியே வந்தவனுக்கு பரம்பொருளின் அகண்டாகாரத் தோற்றம் அவன் அகக்கண்ணில் தெரிகிறது. அகண்டமாய் இருக்கிற பொருளைப் பார்த்தான் என்றால், அகண்டம் முழுதும் கண்டான் என்பதில்லை, சிறைச்சாலை சன்னல் வழியே பார்த்த பொருட்கட்கும், சிறையைவிட்டு வெளிவந்து பார்த்த விரிந்த உலகத்திற்கும் தொடர்பு உண்டு என்பது அவனுக்குத் தெரியும். அவை யாவும் ஒன்றே! என உணர்கிறான். அதுவே அகண்டாகார அனுபவம்.

“குருநாதன் காட்டிய வாயிலில் நுழைந்து போய்ப் பார். கண்டமாக இருக்கும் ஒன்றினை அகண்டமாய் உணர்வாய்” என்கிறது உபநிடதம். எல்லைக்கு எட்டாத அதே சமயம், பரந்த சமுத்திரத்தின் ஒரு பகுதியைப் பார்த்து - “கடலைக் கண்டேன்!” என்கிறோம், எப்படி அகண்டமான ஒன்றைக் கண்டமாகக் காண்கிறோமோ அதே போன்று எல்லைக்கு அகப்படாத பரம்பொருளை நம்முன்னே வந்த சத்குருவின் வடிவில் காண்கிறோம். தீவிர முயற்சியாலும், மனதிடத்தாலும் குருவருள் பெற்று அந்த அகண்டாகாரப் பரம்பொருளை உணர்வோம்.

ஆன்மீகத்திலும் எந்தச் செயலும் திடீரென்று நடந்து விடாது. முயற்சி தேவை. முயற்சியின் அளவுக்கு ஏற்றபடி ஆத்ம அநுபவங்களும் வரும்.

சாப்பிட உட்கார்ந்தவர்க்கு பசி, பாயசத்திலிருந்து, தயிர்சாதம் வரை சாப்பிட்ட பின்தான் அடங்கும்

எனலாமா? ஒவ்வொன்றாய்ச் சாப்பிட, சாப்பிட பசி மெல்ல மெல்ல குறையும் என்ற அழகிய உதாரணத்தை வாகீச கலாநிதியின் வியாக்யானத்தில் கண்டுள்ளோம். சாதனை செய்யும் போது எந்த எந்தப் பக்குவத்தில் இருக்கிறோமோ, அந்த அந்த பக்குவத்திற்கு ஏற்ப அநுபவம் சித்திக்கும். அதனால்தான் குருநாதன் சந்நிதானத்தை அடைந்து அவன் சொன்ன வழிப்படி சாதனை பயில வேண்டும். உழைப்பின்றி ஊதியம் இல்லை.

சிலர் கேட்கலாம், ஏராளமான உபதேச நூல்களைப் பலர் எழுதி இருக்கிறார்களே? அவற்றைப் பயின்றால் போதாதா? குருவைச் சரண் அடைந்து ஞானம் பெறும் தேவை எதற்காக? ஒருவர் மளிகைக் கடை வைத்திருக்கிறார், அவர் கடையில் எல்லோரும் பண்டங்களை வாங்கி, வீட்டில் போய்ச் சமைத்துச் சாப்பிடுவர். அதே சமயம், அவர் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போது , அதே பண்டங்களை வியாபாரி வீட்டிற்கு கொண்டு போய் விருந்தினர் தேவைக்கும், ருசிக்கும் தக்கபடி சிறப்பாகச் சமைத்து உணவளிக்கிறார். எல்லோருக்கும் அரிசி கிடைப்பது பொதுவான செயல். வீட்டில் நாடி வந்தவர்க்குச் சமைத்துப் போடுவது சிறப்பான செயல். நூல்களில் உள்ளவை பொது உபதேசம். பகவானை அடைந்து அவர் நமக்காகத் தருவது சிறப்பான உபதேசம். இவர் பக்குவம் உடையவர் என்று அறிந்து அதற்கேற்றபடி பகவான் தருவது சிறப்பான வழிகாட்டல். இன்றும் நம்மிடையே உயிர்க்கனலாய் ஓங்கும் பகவானை உள்ளன்போடு பணிந்தால், அவர் நிச்சயம் நமக்கேற்றபடி சிறப்பு வழிகாட்டல் தருகிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நிலைக்கு ஏற்றபடி அநுபவம் உண்டாகும். இன்னும் பகவானைப் பணிந்தவர்கள் இதை அநுபவ பூர்வமாக உணர்கிறார்கள்.

உபதேச உந்தியாரில் முதல் பத்துப் பாடல்களில் பகவான் ஆன்மீகச் சாதனையின் பல்வேறு வழிகளையும், படிகளையும் கூறுகிறார். ஆயினும், அவை அனைத்தின் முடிவும் அத்வைத அநுபவத்தில் முடியும் ஒன்றாகும்.

ஒவ்வொரு சாதகர்களின் மனமும் ஒரே பக்குவ நிலையில் இராது. அவரவர் பக்குவத்தை உணர்ந்து மனத் தின்மையை கண்டு, அவரவர் தயார் நிலையிலிருந்து பரிணாமம் அடையும் வகையில் அதற்கேற்ப குருநாதர் உபதேசிக்கிறார்.

***“நோக்கியே கருதி மெய்தாக்கியே பக்குவம்***
***ஆக்கி நீ ஆண்டருள் அருணாசலா!”***


***(அக்ஷரமணமாலை 63)***

“அருள் வழியால் என்னை நோக்கியும், தனது சித்தத்தில் எண்ணியும், எனது அகந்தையை தனது ஆன்மசக்தியால் தாக்கியும் என்னை ஆண்டருள்வாய்” என்கிறார் பகவான். இங்ஙனம், பகவானின் அருள் சக்தியால் தன்னை ஆட்கொண்டதை வியந்து பாடுகிறார் முருகனார்.

***“பிழைத்தாற் பொறுக்கும் பெம்மானே***
***பிறைசேர் சடையாய் முறையோ வென்று***
***அழைத்தேற்கு அது அறிந்து என்று அருள்***
***அடியேன் வினையை நுதற்கண்ணால்***
***விழித்தே அழித்தாய் வேங்கடவா!”***

***(ஸ்ரீ ரமணசந்நிமுறை 453)***

இறைவன் திருவருளைப் பெற, முதலில், உள்ளத்தில் தீவிர தாகம் எழவேண்டும் (முமுட்சுத்வம்), ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுபோல், எப்படி ஒருவன் தலையைத் தண்ணீரில் அமிழ்த்தும்போது, மீண்டும் மூச்சுவிட வேண்டும் என்ற ஒரே எண்ணமாகிய தீவிரம் எழுகின்றதோ, அதே போல, இந்தச் சம்சாரத்திலிருந்து விடுபட்டு, இறைவனை அடைய வேண்டும் என்ற தீவிர உணர்வு உள்ளத்தில் தீப்பிடிப்பது போல் பற்ற வேண்டும். அப்போது குருவருள் பொழிகிறது. சாதகனின் பக்குவத்துக்கு ஏற்ப அநுபவம் வர வர உயர்ந்து வரும். அநுபவம் ஏற ஏற ஆத்மானந்தம் உயர்ந்து வரும். ஒரு பிடி சாப்பிட்ட உடனே அதற்கு ஏற்ற அளவு பசி தணிகிறது. அதுபோல அநுபவம் சிறிது பெற்றபின் ஆனந்தம் தலைப்பட ஆரம்பிக்கும். நமது தொடரும் முயற்சியால் நம்மை உற்சாகப்படுத்த இறைவனே இந்த ஆனந்த அநுபவத்தை அளிக்கிறான். நமது



ப்ரக்ஞை உணர்வு முழுமையடையாத நிலையிலேயே நம் உள்ளத்தில் புகுந்து காத்திருக்கிறான். நமக்கு ஆன்மீக ஆவல் பேரலையாய் எழும்பும் போது, நம்மைப் பக்குவப்படுத்துகின்றான். நமது கருத்தைப் பண்படுத்தித் திருத்தி நமது உடலின் ஒவ்வொரு அணுவிலும் புகுந்து வியாபித்து தன்னைத் தவிர வேறெண்ணமே தோன்றாதவாறு பண்படுத்துகிறான். தனது அளவற்ற கருணையால் நம்மை ஆண்டு கொள்கிறான். எனக்குத் தகுதி இல்லாவிடினும் எனது பூர்வ சம்ஸ்காரத்தினால், என்னை வந்து ஆண்டு கொள்கிறான்.

*"உருத்தெரியாக் காலத்தே*
*உள்புகுந்தென் உளம்மன்னிக்*
*கருத்திருத்தி ஊன்புக்குக்*
*கருணையினால் ஆண்டு கொண்ட*
*திருத்துருத்தி மேயானைத்*
*தித்திக்குஞ் சிவபதத்தை*
*அருத்தியினால் நாயடியேன்*
*அணிகொள்தில்லை கண்டேனே!"*

*தித்திக்கும் சிவபதம் என்ற பதப் பிரயோகம் சிறப்பு வாய்ந்தது. சாதாரணமான இனிப்புகளையே, வெல்லச் சீடை போன்றவற்றையே ருசித்து உண்டு கொண்டிருக்கும் சிறுவனை அந்தப் பழக்கத்திலிருந்து மாற்ற வேண்டு மானால், சீடையைவிட மிக இனிப்பான ஒன்றை, 'ஸந்தேஷ்' போன்ற ஒன்றைக் கொடுத்தால், அதன் உயர்ந்த இனிய ருசியிலேயே ஈடுபட்டு, சீடையை விட்டுவிட்டு, 'ஸந்தேஷ்' ஒன்றையே நாடுவான். அது போன்று, உலக இன்பங்களிலேயே இனியது என்று எண்ணி உழன்று கொண்டிருக்கும் ஒருவனை ஆன்மீக நிலைக்கு உயரச் செய்ய குருநாதன் உயர்ந்த இனிப்பாகிய சிவபதத்தின் ருசியைக் காட்டுகின்றான். அதிலிருந்து சாதகன் உள்ளம் உலக இன்ப நாட்டத்தை விட்டு விட்டு, இறையருளையே நாடச் செல்கிறது. இதனையே 'தித்திக்கும் சிவபதம்' என மணிவாசகர் குறிப்பிடுகிறார் (திருவாசகம் 724).*

*இந்தப் பிறப்பில் செய்த சாதனை இப்பிறவியில் நமக்கு ஆன்ம சாட்சாத்காரம் கிடைக்காவிடில் வீணாகுமா! எனக் கவலைப்பட வேண்டாம். இப்பிறவியில் கைகூடாவிடினும் இந்த முயற்சியின் பயன் வரும் பிறவிகளிலும் தொடரும். ஏதோ ஒரு பிறவியில் ஜீவயாத்திரை நின்று, பேரின்பம் கிட்டும்.*

**"ஸுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே
யோகப் ப்ரஷ்டோபி ஜாயதே!"**

*என்று கண்ணன் கீதையில் உறுதி கூறுகிறான்.*

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"**

*என்று வள்ளுவரும் உறுதி கூறுகிறார்.*

*பகவானிடம் ஓர் அன்பர் கேட்டார்:-*

*பகவானே! ஏதேனும் ஒரு ரூபத்தில், இறைவனை ரூபத்தியானம் செய்யாலாமா?*

***பகவான்:*** *ஆஹா செய்யலாமே உருவத்தியானம் நல்ல ஆன்மீக முன்னேற்றம் தரும்.*

***அன்பர்:*** *இறைவனை உருவம் இல்லாதபடி அரூபத் தியானம் செய்யலாமா?*

***பகவான்:*** *அரூபத் தியானமும் நல்ல பலனைத் தரும்*

***அன்பர்:*** *ஆனால் பகவானே, சிலர் உருவத்தியானத்தை விட அரூபத் தியானந்தான் சிறந்த பலன் அளிக்கும் என்று கூறுகிறார்களே?*

***பகவான்:*** *எந்த வழியில் சென்றாலும் அது ஆன்மீக முன்னேற்றம் தரும். உங்களுக்கு உகந்த ஏதோ ஒரு வழியினைத் தேர்ந்தெடுத்து அதில் முழு மூச்சுடன் ஈடுபடுவதைவிட்டு, ஏன் அனாவசியமாக இது உயர்ந்தது, அது உயர்ந்தது என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஏதேனும் ஒரு வழியில் முழு மனதுடன் தீவிரத்துடன் ஈடுபடுங்கள். வீண் தர்க்கத்தால் பயனேதுமில்லை.*

*நாம் தொடர்ந்து சாதனையில் ஈடுபட்டு வந்தால் நம் ஆன்மீக உணர்வு வளர்ச்சி பெறும்; மனதில் உறுதியும், வைராக்யமும் நிலைபெறும். ஆண்டவன் இருக்கிறான் என்று பிறர் கூறக் கேட்கிறோம் ஆனால் அதில் நமக்கு முழு நம்பிக்கை இல்லை. சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. அந்தச் சந்தேகம் நீங்க வேண்டும். ஆண்டவன் எங்கும் எப்பொழுதும் இருக்கிறான். காணாத குறை நம்முடையதே. இறைவனைத் தேடும் நான் யார் என்ற கேள்வி தீவிரமாக நம் உள்ளத்தே எழும்போதே நம்பிக்கை உதயமாகும். குருநாதரை நம்பிக்கையுடன் நாடி, அவர்காட்டும் நெறியைப் பின்பற்றும்போது, கேள்வி நின்று, விடை பிறக்கிறது.*

*மனவலிமை, வைராக்யம் என்பது நம் போன்ற சாமான்யருக்கு ஒரே நாளில் வந்துவிடாது. உடற்பயிற்சி செய்பவருக்கு ஒரே நாளில் உடல் பலம் வந்து விடாது. தினந்தோறும் பயிற்சியில் ஈடுபட, ஈடுபட உடல் வலுப் பெறுகிறது. அதைப் போலவே படிப்படியாக விடாமல் சாதனை செய்யும் போது மனம் திண்மை பெறுகிறது.*

இறைவன் திருவருளில் நம்பிக்கை வைத்து சாதனை செய்யும் போது இடையில் ஏற்படும் தடைகள் யாவும் நீங்கும். மனோ நாசத்திற்கும் வாசனை அழிவிற்கும் முதற்படி இறையருள். குருவருளில் கொள்ளும் தீவிர நம்பிக்கை, அந்த நம்பிக்கை பொய்மையை, மெய்மையாகப் பார்த்து மயங்கும் குழப்பம் நீங்கும். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து நம்மைக் கரை சேர வைக்கும் பெரும்துணை குருவின் திருவடியின் மீது வைக்கும் தீவிர நம்பிக்கை. இந்தத் தீவிர நம்பிக்கையே மனமழிந்து ஆன்ம ஞானம் பிறக்க வழி செய்கிறது.

மனத்தை இயக்கம் இன்றி நிறுத்தச் செய்வது கடினமான காரியம். அதே சமயம், மனத்தை நிறுத்துவதுதான் ஆத்ம ஞானத்தின் திறவுகோல். இதைச் செய்யாமல் எவ்வளவு சித்திகள் அடைந்தாலும் பயனில்லை.

**“சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்**
**மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே”**

என்று பாடுகிறார் தாயுமானவர். எப்படி மனத்தைக் கட்டுப் படுத்துவது? எப்போதும் பல விஷயங்களை எண்ணி எண்ணி எண்ணங்களால் நிறைந்திருக்கும் மனதை எப்படி நிறுத்துவது? மனத்தை, சிந்திக்காதே என்பதை விட இறைவன் தொடர்பான விஷயங்களைப் பற்றி மட்டுமே சிந்தி என்று மடைமாற்றிவிட வேண்டும். நாம் சென்ற இதழில் பார்த்தபடி மசி அடைத்திருக்கும் பேனாவைச் சுத்தம் செய்ய அதில் நல்ல நீரை ஊற்ற வேண்டும். முதலில் வெளிப்படும் நீர் மசிக் கறுப்புடன் இருக்கும். தொடர்ந்து நீரை உள்ளே ஊற்றிக் கொண்டே இருக்க, மாசு முற்றிலும் மறைந்து இறைவனையே நினைக்க, நினைக்க நினைப்பே மறைந்து, இறுதியில் மனமே மறைந்து விடுகிறது.

‘யத் பாவம் தத் பவதி’ என்கிறான் கண்ணன். எதை நாம் தீவிரமாக எண்ணுகிறோமோ நாம் அதுவாகவே ஆகிறோம். அதுவே நம்மனம் முழுவதையும் ஆட்கொள்கிறது. அதன்றி, உபரி விஷயங்களிலேயே மனம் வைத்திருந்தால், சாதனை வெற்றி பெறாது. “செருப்பு வைத்துச் சேவடி தொழுமாப் போலே” என்று வைணவ வியாக்யானம்

உதாரணம் கூறும். ஒரு வைணவர் பல நாள் செருப்பு வாங்க வேண்டும் என்று பார்த்துப் பார்த்து கடைசியில் ஒரு கடைக்குப் போய் புதுச் செருப்பு வாங்கினார். வரும் வழியில் பெருமாள் கோவிலைப் பார்த்தார். உள்ளே போய்ப் பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்ற ஆசை உண்டானது ஆனால் காலில் போட்டுக் கொண்டிருக்கும் புதுச் செருப்பை எங்கே வைப்பது? வெளியே கடை, காவலாளி ஒருவரும் இல்லை. எனவே செருப்பைக் கழற்றி வெளியே வைத்து விட்டு உள்ளே போனார். உடனே சுவாமி தரிசனம் செய்து விட்டு வெளியே வந்து விடலாம் என்று எண்ணினார். ஆனால் யாரோ பூஜைக்கு வேண்டிக் கொண்டிருந்தபடியால், பட்டர் தீபாராதனை செய்ய நேரம் ஆகியது. இவர் மனமோ, தெருவில் விட்டு வந்த செருப்பில் இருந்தது, நேரம் ஆகிக் கொண்டே இருக்கிறது. தீபம் காட்டியாகிவிட்டது. மீண்டும் சடாரி (வைணவக் கோயிலில் தலையில் வைக்கப்படும் சடகோபர் திருவடிகள்) கொண்டு வர நேரமாயிற்று. பக்தர், பட்டரை நோக்கி “சீக்கிரம் செருப்பு சாதியுங்கள்” என்றாராம். அவர் மனது வெளியில் விட்டு வந்த செருப்பின் மீதே இருந்தபடியால் சடாரிக்குப் பதில் செருப்பு என்றே கூறிவிட்டார்!

எனவே, மனதில் எந்த நினைவு இருக்கின்றதோ அதுவே முந்திக் கொண்டுவரும். இறக்கும் போது எந்த நினைவுடன் இறக்கிறோமோ, அதுவே அடுத்த பிறவியில் சித்திக்கிறது என்று கூறுகிறார்கள். இறக்கும்போது இறைவன் நினைப்பு வரவேண்டும் என்றால், காலை-மாலை எல்லா நேரங்களிலும் இறைவனை நினைத்துப் பழக வேண்டும். பார்க்கின்ற பொருள்களை எல்லாம் அவனோடு தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டும். அதனை உள்வாங்கி, குருநாதனை அககண்ணால் பார்க்க வேண்டும். தியானத்திலிருந்து மனம் நழுவும் போது மிகக் கவனமாகக் பார்த்துக் கொள்ள வேண்டும், நழுவாதிருக்கப் பார்க்கும் பொருட்களில் எல்லாம் ஸத்குருவினை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

**"உயிரா வணமிருந்து உற்று நோக்கி**
**உள்ளக்கிழியில் உருவெழுதி"**

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

மனத்தைப் பக்குவமாக்குவதில் மூன்று நிலைகள் உள்ளன. மனத்தைத் தடுப்பது, அடுத்ததாக மனத்தை நிறுத்துவது, இறுதியில் மனத்தை அழிப்பது.

மனத்தைத் தடுப்பது என்றால் மனம் செல்லும் வழியை மாற்றுவது. மனத்தை நிறுத்துவது, என்றால் ஒரு குறிபிட்ட மையத்தில் நிற்கச் செய்வது (மாற்ற மனம் கழிய நின்ற மறையோன் - சிவபுராணம்), இறுதியில் மனம் அழிபடல். இதுவே முக்தி நிலை.

"அடக்கிவைத்தல்" என்பதின்று மனத்தை மாற்றுதல் என்பது வேறுபட்டது. இது மனம் போகும் போக்கினை ஒழுங்குபடுத்தலாகும். இது விழிப்புணர்வின் வெளிப்பாடு. ஒழுங்கு நமது ஆழமான உள்மையத்திலிருந்து வெளிவருவது. சாதனை என்பது ஒரு உள் செய்முறை (Inner Process) எப்பொழுதும் விழிப்பு நிலையில் (Awareness) இருந்தால் சாதனை சித்திக்கும்.

பூஜை, ஜபம், தியானம் எல்லாமே மனத்தைத் தடுக்கும், மனத்தை நிறுத்தும், மனத்தை அழிக்கும் கருவிகளே. எதைப் பின்பற்றும்போது, நமது தன் முனைப்பு முற்றும் அழிந்து இறைப் பொருளில் ஒன்ற வேண்டும். பகவான் உபதேச உந்தியார் நாலாம் பாடலில்

**"திடமிது பூசை செபமும் தியானமும்**
**உடல் வாக்குளம் தொழில் உந்தீபற**
**உயர்வாகும் ஒன்றியொன்று உந்தீபற"**

என விளக்குகிறார். வழக்கமாகக் கூறும் பொருளின்படி பூசை, ஜபம், தியானம் இவை இறையே. உடல், வாக்கு, மனம் ஆகியவை செய்யும் சாதனை முறைகள், பூஜையை விட ஜபமும், ஜபத்தைவிட தியானமும் உயர்ந்தது என்பதே. ஆயினும் ஆழ்ந்து நோக்கும் போது இதையும் தாண்டிய பொருள் புலப்படும். 'ஒன்றுதல்' என்றால் இருமை உணர்வு இன்றி ஒன்றாதல் என்பது பொருள்.

*பகவான் கூறுவதாவது: நீ பூசை, ஜபம், தியானம் எந்த முறையைப் பின்பற்றினாலும், நான் செய்கிறேன் என்ற தன்முனைப்பு நீங்கி, நாம் வழிப்படும் பொருளில் அத்வைதமாகிய அந்த ஒன்றில் பிரிவற்ற அகண்டாகார வஸ்துவில் ஒன்ற வேண்டும். அதுவே ஆன்மீக உயர்வுக்கு வழி. (இந்த விளக்கத்தைப் பகவானிடமிருந்து பெற்றதாக டி.பி.ராமசந்திர ஐயர் கணேசண்ணாவிடம் குறிப்பிட்டுள்ளார்).*

*"ஒன்றுதல்" என்றால் என்ன? நாம் ஒரு சித்திரத்தைக் கண்டுள்ளோம். பக்த சூர்தாஸ் என்பவரைப் பற்றிய சித்திரம். பிறவியிலிருந்தே கண்பார்வை இல்லாத சூர்தாஸ், பெரிய பக்தர், பெரிய கவி, பெரிய இசைஞர். இந்த விஷய உலகைப் புறக்கண் கொண்டு பார்த்து மயங்கி, அதன் வலையில் சிக்க மாட்டேன். அகக்கண் கொண்டு இறைவனை என் இதயத்தில் பார்ப்பேன், என்றிருந்த மாபெரும் பக்தர். இந்தச் சித்திரத்தில், புறக்கண் பார்வையே இன்றி கையில் தம்புரானை மீட்டிக் கொண்டு பாடுகின்றார். அவர் முன்னே குழந்தைக் கண்ணன் அமர்ந்து கொண்டு, மிக்க ஆர்வமும், மகிழ்வும் முகத்தில் தெரிய பாட்டைக் கேட்பதை இந்தச் சித்திரம் காட்டுகிறது. வெளியே இருந்து கேட்டால் போதாது என்று, அவர் இதயத்தின் உள்ளும் நின்று கேட்கிறார் போலும். பார்ப்போர் உள்ளம் உருகும் வகையில் இச்சித்திரம் அமைந்துள்ளது. புறக் கண்ணை விடுத்து, அகக்கண்ணால் இறைவனைக் கண்டு, அவனுடன் ஒன்றிய பேரானந்தம், அகந்தை முற்றும் கரைந்து, அவனுடன் ஒன்றிய அத்வைத அநுபவம் சூர்தாஸ் முகத்தில் பார்க்கிறோம்.*

***"முகத்தில் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"***

*என்ற திருமூலர் வாக்கு இங்கே உயிர் பெற்று வருகின்றதல்லவா! இதுவே உயர்வாகும், ஒன்றில் ஒன்று என்ற நிலை. "உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தல்" என்று பகவான் கூறும் நிலை. "இருந்தபடி இருங்கோள்" என அருணகிரிநாதர் கூறும் நிலை.*

“நீ இருந்தபடியே இரு. உள்ள பொருளாகவே, உள்ள உணர்வாகவே இரு. இறைவன் அருள் வந்து தானே உனக்கு வெளிப்படும்” என்று கூறும் அருணகிரி அதற்குச் சில சாதனங்களையும் கூறுகிறார்.

**“தடுங்கோள் மனத்தை, விடுங்கோள்**
**வெகுளியை, தானம் என்றும்**
**இடுங்கோள், இருந்தபடி இருங்கோள்**
**எழுபாரும் உய்யக்**
**கொடுங்கோபச் சூருடன், குன்றம்**
**திறக்க தொளைக்க வைவேல்**
**விடுங்கோன் அருள் வந்து தானே**
**உமக்கு வெளிப்படும்!”**

இறைவன் அருள் பெற வேண்டுமெனில் முதலில் அறத்தோடு இணைந்த சாதனை செய்ய வேண்டும். அடுத்து, தானம் என்னும் இடுங்கோள் என்பது இதுவே. எந்த ஒரு கடிவாளமும் இன்றி தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிற மனத்தை சாதனை மூலம் தடுத்து நிறுத்து என்று அறிவுறுத்துகிறார். இப்போது மனம் உன்னைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. நீ மனத்தைத் தடு என்கிறார் குருநாதர். ஓடுகின்ற மனத்தில் இறை உணர்வினை நிரப்பினால் அது நிற்கும். ஒரு ஓட்டைக் குடம் உள்ளது; அதில் எவ்வளவு நீர் ஊற்றினாலும் தண்ணீர் அந்த ஒட்டை வழியாக வெளியே சென்று விடும். நமக்கோ குடத்தில் தண்ணீர் அல்ல, அமுதத்தையே நிரப்ப வேண்டும்! அமுதத்தை எடுத்துக் குடத்தில் விட்டாலும் அது ஒழுகிப் போகும். அந்தக் குடத்தையே அமுதக் கடலுக்குள் அமிழ்த்திவிட்டால், அந்தத் துளை வழியாகவே அமுதம் உள்ளே வந்து குடத்தை நிரப்பி விடுகிறது. குடம் அமுதக் கடலுக்குள்ளே இருக்கிறது. ஓட்டையை அடைக்காமலேயே அமுதம் குடத்துக்குள் நிரம்பிவிட்ட அதிசயத்தை மணிவாசகர் பாடுகிறார்.

**“சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன்**
**கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்**
**மணி வார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர**
**வந்தனைஆட் கொண்டு உள்ளே புகுந்து விச்சை**
**மால் அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்**

***தந்தனை செந்தாமரைக் காடு அனையமேனி***
***தனிச் சுடரே இரண்டுமிலி இத்தனியனேற்கே!"***

*"என்னுடைய ஐந்து இந்திரியங்களையும் உன் வழிபாட்டுக்கு ஆக்கி எனக்குள்ளே அமுதப் பெருங்கடலாய் நீ வந்து புகுந்த போது, ஐந்து இந்திரியங்களாகிய துவாரங்களும் அடைபடாமலேயே இக்குடமாகிய நான் நீயாகி அமுதத்தால் நிரம்பிவிட்டது. இனி இரண்டு என்கின்ற துவைத நிலையே இல்லை" என்கிறார் அடியார்.*

*"பல பல பொருட்களைப் பார்த்து பார்த்து விரிந்து கொண்டே போகின்ற மனத்தைத் தடுத்து உள்முகமாகச் செலுத்தி, பொங்குகின்ற கோபம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகளை அடக்கி, தனக்கு என்று வைத்துக் கொண்டதாக வழங்குக. உள்முகப் பார்வையினால் இருந்த படி இருங்கோள். மனமாசு, சாதனையால் நீக்கப் பட்டு, இருந்தபடி இருங்கள். எல்லோர் உள்ளத்திலும் இறையருள் உள்ளது. புதிதாக பரமாத்மா எங்கிருந்தோ வருவதில்லை. ஆனால் அதை நாம் காணமுடியாமல் அஹங்கார, மமகார அழுக்குகள் அதற்கு மறைப்பாக உள்ளன. அவற்றை நீக்குவதே சாதனை. அப்போது இறையருள் தானே வந்து வெளிப்படும்.*

*பூமிக்குள் கீழே தண்ணீர் உள்ளது. பொருத்தமான கூரான உபகரணங்களால் தண்ணிர் வெளிவரத் தடையாக உள்ள மண்ணை வெட்டி நீக்கினால், அந்தப் பூமியிலிருந்து தண்ணீர் தானே குபுகுபு என வெளிவருகிறது. இறையுணர்வு வெளிப்படத் தடையாக மறைத்துக் கொண்டு இருக்கிற எதிர்மறை இயல்புகளாகிய அஹங்கார, மமகாரத்தை ஒழித்துவிட்டால், அருள்மயமாக இருக்கிற பரமாத்மா தானே வெளிப்படுவார் எனக் கூறுகிறார் அருணகிரியார்.*

*மீண்டும் சிந்தனையைத் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்,*


***ராம் மோஹன்***

# "நான் யார் தெரியுமா?" விலிருந்து "நான் யார்" வரை

### டாக்டர் ஏ.வி.ராஜகோபாலன்

இத்தொடரில் இரண்டு அம்சங்கள் விளக்கப்பட்டு இருக்கின்றன. "நான் யார் தெரியுமா?" என்பது அகங்காரத்தின் வெளிப்பாடு. இதன் இறுதியில் உள்ள கேள்விக்குறி, "இது ஒரு வினா!" என்ற கோட்பாட்டினை வெளிப்படுத்துகிறது. வினாவின் தன்மை என்னவென்றால் இது ஒரு இடைபட்ட நிலை. விடை கிடைத்தவுடன், ஐயம் அல்லது மோகம் நீங்குகிறது. "என் உறவினர்களைக் கொல்லுவதால் என்ன பயன்?" என்ற ஐயம் அர்ஜுனன் மனதில் மோகத்தால் எழுந்தது. இதுவே "அர்ஜுனன் விஷாத யோகம்" எனப்படும். பகவான் கிருஷ்ணரின் தெளிவுரையால்,அவனுக்குக் குழப்பம் நீங்குகிறது. ("நஷ்டோ மோஹ:" - என மோகம் விலகிவிட்டது, "ஸ்மிருதிர் லப்த்:" - "தெளிவு பெற்றேன்!" என்று பகவத்கீதையின் இறுதியில் அர்ஜுனன் உரைக்கின்றான்).

"நான் யார்" என்பது வினா அல்ல. இது ஒரு ஞான நிலை. இலக்கண வரம்புகளுக்கு அப்பார்பட்ட ஒரு தெளிவு. ஆகையால்தான் "நான் யார்" என்பதை கேள்விக்குறி இல்லாமலேயே நாம் அமைத்துள்ளோம். (இதை மிக அழகாக ஆசிரியர் ராம் மோகன் அவர்கள் விளக்கியுள்ளார். "எனவே 'நான் யார்' என்பது ஒரு வினாவல்ல, அது இருப்புணர்வையே குறிப்பிடும் வினாவைத் தாண்டிய விடை").



சென்ற இதழ்களில் இந்தத் தலைப்பின் கீழ் வேதம் மற்றும் சில உபநிஷதங்கள் மூலமாக அகங்கார மகாரங்களால் எழும் “நான் யார் தெரியுமா” என்ற நிலையைப் பார்த்தோம். இப்பொழுது பிரச்ன மற்றும் மாண்டூக்ய உபநிஷதங்கள் மூலமாக, நம் பயணம் தொடரப்போகிறது. இந்த இரண்டு உபநிஷதங்களும், கதை சொல்லும் பாணியில் அமையாது, உபதேச முறையில் அமைந்துள்ளன. சற்றே புலனாகாத கருத்துக்களினால் விளக்கம் அளிக்கும் தன்மை படைத்தவை. வாருங்கள்! உள்ளே செல்வோம்.

### பிரச்னோபநிஷத்

இது சற்றே கடினமான உபநிஷத். தெளிவு பெற ஒரு முறைக்கு மேல் படிக்க வேண்டும். “பிரச்னம்” என்றால் கேள்வி என்று பொருள். இந்த உபநிஷத் 16 கேள்விகள் வடிவத்தில் அமைந்துள்ளது. ஓங்கார உபாஸனையின் பயன் இதில் விளக்கப்படுகிறது. இதன் மூன்று மாத்திரைகளான “அ” என்பது ஜாக்ர நிலையையும் “உ” என்பது ஸ்வபன நிலையையும் “ம” என்பது சுஷுப்தி

நிலையையும் குறிக்கும். இவை முறையே ஸ்தூல, சூக்ஷ்ம, காரண தேகத்தை குறிப்பிடுகின்றன. இவற்றைத் தனித் தனியே உபதேசித்தால் உலகியல் சார்ந்த பலன்களையே அளிக்கும். இவை அழியும் தன்மை படைத்தவை. இவற்றைச் சேர்த்து “ஓம்” என்று உபாஸனை செய்தால் ஒப்பற்ற ஞான நிலையை அடையலாம். முப்புரம் எரி செய்த அச்சிவன் உரை நிலை இதுவே. இந்த இரண்டு கட்டங்களும் “நான்” என்ற பற்று நீங்கும் பிரமாணத்தில், முக்கிய நிலைகள் தனியாக உபாசித்தால் “கிரமமுக்தி” என்ற நிலை கிட்டும். இதுவும் பிரம்மலோகம் எனப்படுவதுதான். ஆனால் சேர்த்து உபதேசித்தால் கிட்டுவதோ “பிரம்ம நிர்வாணம்”. இதுவே கடைநிலை.

அதர்வண வேதத்தில் உள்ள இந்த உபநிஷத் முக்கிய பிராணன் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இது ஐந்து நிலைகளான அதீபூதத்தையும் மற்றும் அத்யாத்மமான புலன்களை இயக்கும் தலைமைத் தேவதையாக வருணிக்கப்படுகிறது. மற்றும் சூரியன், மேகம், இந்திரன், வாயு போன்ற இயற்கைச் சக்திகளாகவும் முக்கியப் பிராணனே அமைகிறது. இந்தக் கருத்து ஜீவாத்மா-பரமாத்மா ஐக்கியத்தைக் காண்பிக்கும் ஒரு தத்துவ விளக்கு. “நான் யார் தெரியுமா” என்ற அகங்கார நிலைக்கு வெளியே, பிரம்ம் சக்தியைக் காட்டும் உபதேசம்.

இந்த உபநிஷத்தின் ஆரம்பத்தில் ஒரு சுவாரசியமான முன்னுரை காணப்படுகிறது. சுகேசர், சத்யகாமர், கார்க்கியர், கௌஸல்யர், கபந்தீ, பார்க்கவர் என்ற பிரம்மத்தை நாடும் சாதகர்கள், பிப்பலாதர் என்ற மகா ஞானியை அணுகி பிரம்மத்தைப் பற்றிய விளக்கத்தைக் கேட்கின்றனர். அவர் உடனே பதில் சொல்லவில்லை. “நீங்கள் மேலும் ஓராண்டு காலம் பிரம்மசர்யத்தையும், தவத்தையும் செய்யுங்கள். பிறகு விருப்பப்பட்ட கேள்விகளை கேளுங்கள். எனக்குத் தெரிந்தால் விடை அளிக்கிறேன்” என்கிறார். இது ஒரு சிறந்த குரு-சிஷ்ய உறவை விளக்குகிறது. பிரம்ம வித்தையை எல்லோருக்கும் உபதேசிக்க இயலாது. அதற்கு வேண்டிய ஈடுபாடும்,

விடாமுயற்சியும் இருக்கிறதா? என்று சோதனை செய்கிறார் குரு. மேலும் "உங்கள் கேள்விகளுக்கு விடை தெரிந்தால் சொல்லுகிறேன்" என்கிறார் அந்த ஞானப் பெட்டகம்.

**"யதி விஜ்ஞாஸ்யாம:**
**சர்வம் ஹவோ வக்ஷ்யாம"**

பிரம்ம வித்தையின் மீது குருவின் மதிப்பும் அதே சமயம் அவர் எளிமையும் புலனாகின்றன அல்லவா! "நான்" போன நிலையின் புற வடிவே இது.

### மாண்டூக்ய உபநிஷத்

மாண்டூகம் என்றால் தவளை என்று பொருள். தவளை மூன்று கால்களால் செல்வது போல் ஆத்மாவும் சுவப்ன, ஜாக்ர, சுஷுப்தி என்ற அவஸ்தைகளைத் தாண்டி, துரீயம் என்கிற உயர்ந்த நிலையை அடைவதை விளக்குவதால் இந்த உபநிஷத்திற்கு இப்பெயர் வந்ததாகக் கூறுவர். ஆனால் இதுதான் இதற்கான சரியான காரணமா என்று தெரியவில்லை.

பன்னிரெண்டு மந்திரங்களைக் கொண்ட இது, உபநிஷதங்களில் மிகச் சிறியது. ஆனால் மிக உயர்ந்த விஷயங்களை விளக்குகிறது. இது அதர்வண வேதத்தைச் சேர்ந்ததாகும். ஜாக்ரத் என்கிற முதல் அவஸ்தையில், ஜீவன் விழித்திருக்கையில் அவன் இந்திரியங்களால் இயங்கு கின்றான். அவற்றின் மூலம் அவன் வெளி உலகத் தொடர்பை அடைகிறான். இது ஸ்தூல நிலை. அடுத்த நிலை ஸ்வப்ன நிலை. இந்த நிலையில் இந்திரியங்கள் இயங்குவதில்லை. மனதால் அவன் விஷய வடிவங்களை அறிகின்றான். அதனால் அது சூக்ஷ்ம நிலையாகிறது. இந்த இரண்டு நிலைகளும் நமக்குத் தெளிவாகப் புரியக் கூடியவை. சாமான்யர்களின் அனுபவத்திற்கு உட்பட்ட நிலைபாடுகள்.

மூன்றாம் நிலை சுஷுப்தி எனப்படும். அது ஆனந்த மயமானது. இங்கு ஜீவன் மற்ற இரு நிலைகளைப் போல விஷய சுகங்கள் எதனையும் விரும்புவதில்லை, கனவும் காண்பதில்லை.

**“ந கஸ்சன காமம் காமயதே**
**ந கஸ்சன ஸ்வப்னம் பச்யதி”**

*இந்நிலை சற்று விவரிக்கப்பட வேண்டிய ஒன்று. இது ஆழ்ந்த உறக்க நிலை போலத் தோன்றினாலும், இவன் ஞான நிலையில்தான் இருக்கிறான். மற்றும் இது உன்னதமான ஒரு ஆனந்த வடிவம். (பிரஜ்ஞானகன ஏவ ஆனந்தமயம் ஹி ஆனந்த புக் ....பிராக்ஞ:). பிரஜ்ஞானமும் ஆனந்தமும் கலந்த நிலை அனுபவத்தால் உணர வேண்டிய ஒன்று. வார்த்தைகளால் அளக்கமுடியாதது.*

*இந்நிலையில் ஜாக்ர, ஸ்வப்ன அவஸ்தைகள் சுஷுப்தியில் இணைகின்றன (ஏகீபூத) என்பதால், இங்கு ஜீவன் ஒரு சாதக நிலையை அடைகின்றான். அது “நான்” என்ற விவகாரம் ஒடுங்கும் நிலை.*

*பிறகு வரும் நான்காம் நிலையே துரீயம். உன்னதமான இந்த நிலையில் இருப்பவன் எப்படி இருப்பான்? “இவன் இத்தகையவன்” என்று விளக்காமல் உபநிஷதம் இவன் “இந்த குணங்கள் அற்றவன்” என்ற நேதி நியாயத்தை அனுசரித்து இந்தக் குணாதீத நிலையை விவரிக்கிறது. இவன் பிரக்ஞை அற்றவன், பார்க்க முடியாதவன், விவரிக்க முடியாதவன், அடையாளமில்லாதவன். அப்படி என்றால் இந்த நிலையின் விசேஷம் என்ன? இங்கு ஒரு சுருக்கமான விளக்கம் கிடைக்கிறது. ஒன்றே ஆத்மா என்ற அத்வைத நிலையை அடைந்தால் அன்றி இங்கு இத்தகைய பரிபக்குவத்தை அடைய முடியாது. ஏன் இந்த ரத்னச் சுருக்கம்? இந்த உபநிஷத்தின் கடைசி ஸ்லோகத்தில் விடை கிடைக்கிறது.*

*“தன்னால் தானே (தன்னுடைய ஆத்மாவை) ஒருவன் அடைகிறான். இதை அறிவாயாக, இதை அறிவாயாக” என்ற உன்னத விளக்கம் நமக்கு விழிகாட்டுகிறது. இக்கருத்து பின்னர் வந்த பாஷ்யங்களில் மேலும் விளக்கப்பட்டுள்ளது. “அத்வைதம்” என்ற சொல் முதன் முதலாக இங்குதான் கூறப்பட்டுள்ளது என்பது சிலர் கருத்து.*

மிகவும் குறுகிய அளவில் மிகப்பெரிய விஷயங்கள் பேசப்படுகின்றன. இந்த உபநிஷத்தில் அயம் ஆத்மா பிரம்ம என்ற அதர்வண வேத மகா வாக்கியம் உள்ளது. இந்த உபநிஷத்திற்கு மற்றுமோர் விசேஷம் உண்டு. ஆதிசங்கர பகவத் பாதரின் குருவான ஸ்ரீ கௌடபாதாசாரியார் இதற்கு வியாக்யானம் செய்துள்ளார். இந்த கௌடபாத காரிகையின் நான்கு அத்தியாயங்களுக்கும் ஆதிசங்கரர் உரை எழுதியுள்ளார். மிகவும் உயர்ந்த வேதாந்தத்தை விளக்கும் இந்த உபநிஷத் முமுக்ஷுவுக்கு மிகவும் ஏற்றதாகப் போற்றப்படுகிறது. “நான் யார்” என்ற கேள்விக்குச் சங்கேதமான விடை கிடைக்கிறது. சாதகன் முதலில், தான் நான்கு அவஸ்தைகளில் எதில், எந்த நிலையில் இருக்கிறோம் என்ற விசாரம் செய்யத் துவங்கியதும் ஞானபாட்டையில் அவன் சஞ்சாரம் துவங்குகிறது. சுஷுப்தி நிலையை அடைவதே உயரிய சாதனை. இதையும் தாண்டித் துரீயத்தை அடைபவன் பிரம்ம ஞானியாகிறான். வாழ்வின் அனுபவங்கள் பல நமக்கு சுஷுப்தி மற்றும் துரீயத்தின் பொருளைத் தெளிவுபட விளக்கும்.

இந்த உபநிஷத்தின் கொள்கைகள் புரிபடாதவை போலத் தோன்றும். பொறுமையுடன் கவனமாகப் படித்தால் இது விளங்கும். சாதகன் பிரம்மத்தை அடைய மூன்று மார்க்கங்கள் கூறப்படுகின்றன, அவையானவை -

1. பக்ஷி ரீதி - இது பறவை உணவை எடுத்துச் செல்லும் முறை. வேகமாகச் செல்கையில் உணவு அதன் வாயிலிருந்து விழுந்து விடலாம்.

2. மர்க்கட ரீதி - குரங்கு உணவை எடுத்துச் செல்லும் போது மிகவும் உறுதியாகப் பற்றிக் கொள்ளும். இருந்தாலும் அது மரத்திற்கு மரம் தாவும் போது உணவு கீழே விழ வாய்ப்பு உள்ளது.

3. பிபீலிகா ரீதி - இது எறும்பின் போக்கு. சிறிய அளவில் எடுத்துச் சென்றாலும் எறும்புகள் உணவைக் கவனமாக எடுத்துச் செல்லும் தன்மை உடையவை.

இந்த முறையில் “பிபீலிகா ரீதியில்” கவனமாகப் படித்தால் மகோன்னதமான இந்த உபநிஷதங்களின் கருத்தைச் சரியான முறையில் உணர முடியும். இதில் மற்றுமொரு சுவையான கருத்தும் உண்டு. “வேகம்” என்ற பரிமாணத்தில், பறவைகள் மிகவும் அதிகமான வேகத்தில் பறக்கக் கூடியவை. குரங்கும் ஓரளவு வேகத்தில் செல்லக் கூடியது. எறும்பு மிகவும் நிதானத்துடன் செல்லும். ஆத்யாத்ம விஷயங்களில் வேகம் தேவையில்லை. விவேகம் மட்டுமே அவசியம்.

## *பௌர்ணமி கிரிவலம் வரும் நாட்கள் - 2011*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி 19 | புதன் | அதிகாலை 04.45 | 20 | வியாழன் | அதிகாலை 03.00 |
| பிப்ரவரி 17 | வியாழன் | அதிகாலை 04.20 | 18 | வெள்ளி | மாலை 02.15 |
| மார்ச் 19 | சனி | அதிகாலை 02.30 | 20 | ஞாயிறு | நள்ளிரவு 00.10 |
| ஏப்ரல் 17 | ஞாயிறு | காலை 11.20 | 18 | திங்கள் | காலை 09.00 |
| மே 16 | திங்கள் | இரவு 07.40 | 17 | செவ்வாய் | மாலை 05.40 |
| ஜூன் 15 | புதன் | அதிகாலை 03.30 | 16 | வியாழன் | அதிகாலை 02.30 |
| ஜூலை 14 | வியாழன் | மதியம் 01.15 | 15 | வெள்ளி | மதியம் 12.45 |
| ஆகஸ்ட் 13 | சனி | நள்ளிரவு 12.20 | 14 | ஞாயிறு | நள்ளிரவு 12.40 |
| செப்டம்பர் 11 | ஞாயிறு | மதியம் 01.50 | 12 | திங்கள் | மாலை 03.15 |
| அக்டோபர் 11 | செவ்வாய் | காலை 05.15 | 12 | புதன் | காலை 06.00 |
| நவம்பர் 10 | வியாழன் | நள்ளிரவு 12.15 | 11 | வெள்ளி | அதிகாலை 02.10 |
| டிசம்பர் 9 | வெள்ளி | மாலை 06.45 | 10 | சனி | இரவு 08.15 |

# செவியமுதம்

## வஸந்தா ராகவன்

ஓர் ஒளிக் கற்றையானது எப்படி ஒரு படிகத்தின் (Prism) உள்ளே நுழைந்து வெளிவரும்போது பலவர்ணங்களாகக் காட்சி தருகின்றதோ, அதுபோல அப்பப்பா! மனிதர்களிடம்தான் ஒரு இயற்பொருளான முகத்தின் ஊடே எத்தனை முகங்கள்!. நமது ஆசிரியர் ஒரு முறை எழுதியிருந்தார், ஒரு அறையைப் பெருக்கத் துவங்கும் போது முதலில் தூசி கிளம்பி பின்னர்தான் அடங்கி அறை சுத்தமாகும் என்று. அதுபோலதான் மனித மனமும் பல பிறவிகளின் வாசனைகளினால் நிரம்பிக் கிடக்கிறது. மேலும் பல அழுக்குகளும் திட ரூபத்திலே படிந்து மனதை மேலும் கடினமாக்கிக் கிடக்கின்றது. அதைத் தகர்க்க நாம் முயலும் போது அதுனுள்ளே இருந்து எழும்புகிறதே, அந்தக் கொடிய ஸ்வரூபங்களை சந்திக்கும் வலிமையும் கூட அப்பரம்பொருளின் அருளாலேதான் நமக்குக் கூடும். அவ்வாறாக எழும் அந்த எண்ணங்களைக் கண்டு அஞ் சிவிடாமல் எங்கிருந்து அவை எழுகின்றன என்று இழை, இழையாகப் பிடித்து அறுத்து எறியதான் அழியும் மனமும்.

இந்த முறை விடுமுறையாதலால், இரண்டு பழைய ஆங்கிலப் படங்களைப் பார்க்க நேர்ந்தது. ஒன்று “Shutter Island” மற்றொன்று “Matrix”. இதில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? சத்சங்கம்! ஆம் சத்சங்கமேதான். இது என்ன, ஒரு கேந்திரமோ, கோவில் மண்டபமோ, தியான மண்டபமோ இல்லாத ஒரு சத்சங்கமா? இது எப்படி சாத்தியப்படும்! என்ற எண்ணம் உண்டாகலாம். சத்சங்கங்கள் கூடும் போது அங்கு வருவதைச் சிலர் நடைமுறையாக மட்டுமே கொண்டுள்ளனர். சிலர்

நம்மில் சத்சங்கங்கள் கூடும்போது வந்து அதைக்கேட்டு அக்கணநேர உத்வேகத்தில் எல்லாவற்றையும் அறிந்து கொண்டோம் என்ற எண்ணத்தில் திளைத்து விடுகிறார்கள். மேலும் சிலரோ சத்சங்கங்களில் உட்கார்ந்து கேட்டு தெளிவுற்ற கருத்துக்களை உன்னதமாக உணர்ந்து அருள் பாதையில் நடக்க முயல்கையில் எதார்த்த நிகழ்வுகள் வழியில் குறுக்கிட, தமது வாசனைகளால் தாக்கம் பெற்று, சத்சங்கங்களில் கேட்டதை 'அம்போ' என்று காற்றில் விட்டுவிட்டு செய்யும் செயல்களை நியாயப்படுத்திக் கொண்டு போலியான முகத்தோடு நடமாட ஆரம்பித்து விடுகிறார்கள். பல இளைய தலைமுறையினர்கள் சத்சங்கங்கள் என்று எண்ணி ஒரு சிலரின் கற்பனையான மனோபாவத்திற்குச் தங்களையே விலையாகக் கொடுத்து விடுகின்றனர். சத்சங்கங்களின் உண்மையான செயல் நோக்கமும் இதனால் வெகுவாகச் சிதைவுறுகிறது.

இப்படி எல்லாம் நடக்கக் காரணம் என்ன? நமது வேகமான வாழ்க்கைமுறைதான். வேகத்தை மாற்ற இயலுமோ, இயலாதோ! வேகத்தைக் குறைக்க வழி ஒன்று நிச்சயமாக இருக்கும். நம்மால் அது முடியாதெனின் அதை யார் குறைப்பார்கள்? சந்தேகமில்லை அவன் ஒருவனால்தான் அது முடியும். அந்த அவன் "வேகம் கெடுத்தாண்ட வேந்தன்" என்று மாணிக்கவாசகர் குறிப்பிடும் பெருமான் தான்.

மேலும், நம் இந்த வேகமான எதார்த்த வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும், செய்யும் ஒவ்வொரு செயலையும் சத்தங்கத்தின் அங்கமாக மாற்றிவிட்டால், அது அந்த அர்த்தமற்ற செயல்களே உயர்ந்த செயல்களாகப் பரிணமிக்கும் அல்லவா? நாம் நாமாக இருக்க, அது எவ்வளவு உதவுகிறது தெரியுமா?

**"யத்யத் கரோமி தத்தத் சகலம் ஸம்போ! தவ ஆராதனம்!'**

"எனக்கு வழிபாடு, தியானம், பூஜை இப்படி எதுவுமே தெரியாது. எனவே, நான் செய்யும் சாதாரணச் செயல்களையே உனது வழிபாடாகவும் எனது தியான

*முயற்சியாகவும் ஏற்று என்னைக் காத்தருள்வாய்!" என்று சங்கரர் வேண்டியதை நினைவு கூறுவோமாக.*

*அதுமட்டுமல்ல, சநாதன தர்மத்தையும் அதில் உள்ள சாராம்ஸத்தையும் நம் இளையதலைமுறையினருக்கு சொல்லிக் கொடுக்க இதைவிட நல்ல வழி ஏது?*

*கண்ணன் கீதையில் கூறுகின்றான்:-*

***"ஸனைஹி, ஸனைஹி உப்பரமேத்***
***புத்யா த்ருதி க்ருஹீதயா |***
***ஆத்ம ஸம்ஸ்தம் மனஹ் க்ருத்வா***
***நகிஞ்சிதபி சிந்தயேத் ||"***

*"வேகமில்லாமல் மெதுவாக மெதுவாக இறைவனை மனதில் திடமாகப் பற்றிக் கொள்ளுங்கள். எண்ணம் முழுதும் இறை எண்ணமே நிறைந்திருக்கட்டும். வேறெதைப் பற்றியும் சிந்திக்காமல், வேகமின்றி முன்னேறுங்கள்" என்பதே கண்ணன் அறிவுரை. இதுவே இக்கால வாழ்க்கையினை அழிக்கும் அசுர வேகத்திற்கு மாற்று.*

*இப்பொழுது திரைப்படத்திற்கு வருவோம்!*

"Shutter Island" *என்னும் ஆங்கிலப் படத்தில் வரும் கதாநாயகன், தான் ஒரு துப்பறியும் நிபுணன் என்னும் எண்ணத்திலேயே வாழ்ந்து, துப்பு துலக்கத்தான் அத்தீவிற்கு வந்திருக்கிறோம் என்ற நினைப்புடனேயே ஓடி, இறுதியில் தானும் ஒரு மனநோயாளிதான், மற்றவர்களைப் போல சிகிச்சைக்காகத்தான் அங்கு அழைத்து வரப்பட்டிருக்கிறோம் என்று உணர்த்தியும் கூட, தன் கற்பனை வேடத்திலேயே தங்கிவிடுகிறான். நாமும் இவ்வுலகத்தில் இதைச் சாதிப்போம், அதைச் சாதிப்போம், இப்படி இருப்போம், அப்படி இருப்போம் என்ற கற்பனைகளிலேயே நம் நேரத்தையும், பலத்தையும் செலவிட்டு, நிகழ்காலத்தில் இருக்க விருப்பப்படாமல் கற்பனையான பாவத்திலேயே தங்கிவிடுகிறோம்.*

*மனித மனம் எப்படித் தன் இருப்பை மறந்துவிட்டு தான் மெய்மையினின்று வேறாக நினைத்துக் கொண்டு எவ்வளவு வேடங்களை ஏற்கிறது! அது அனைத்தும்*



வேடங்கள் என்பது அறவே மறந்து போய் பின் வேடங்களே வாழ்க்கையாகிவிடுகிறது. பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம்..? பின் உயிர் துறந்தோம். இது என்ன Fibonocci series போல. எதற்காகப் பிறக்கிறோம், எதற்காக வளர்கிறோம், பின் ஏன் உயிர் துறந்தோம் என்ற இடையறாச் சங்கிலி? இங்கு மூன்றாவதாக வருகிறதே, வாழ்ந்தோம்..என்றால் எப்படி? எப்படிக் கோடி, கோடியாகச் சம்பாதித்து, பின் அதில் ஒரு ரூபாய் கூடுதலாக செலவு செய்து, அதைச் சரிகட்ட மீண்டும் சம்பாதித்து, சந்தோஷமென எதை எதையோ நினைத்து அதன் பின் ஓடி எதிலுமே திருப்தியே ஏற்படாமல் வாழ்ந்தோம் என நினைப்புக்கூட இல்லாமல் மூப்பையடைந்தவுடன், இப்போ வருமோ? எப்போ வருமோ? என தர்மனின் வரவை எதிர்பார்த்து, இது என்ன சுழற்சி? இதுவா நாம் வாழ்ந்தோம் எனப் பறைசாற்றுவது?

இச்சுழற்சியின் முடிவுதான் என்ன, இதிலிருந்து மீள்வது எப்படி? அறிஞர் ஒருவரின் தமக்கையிடம் பேசும் போது அவர் கூறிய இந்த வரிகளே நினைவிற்கு வருகிறது. “எப்படி ஒரு லோபிக்குப் பணத்தின் மேல் பற்று இருக்குமோ எப்படி ஒரு காதலிக்குத் தன் மணாளன் மேல் தீவிர அன்பு இருக்குமோ, அது போல தீவிர அன்பும்,

ஏக்கமும் இருந்தால்தான் நாம் காண்பதையெல்லாம் அத்வைதமாக உணரமுடியும்."


நமது பகவான் ரமணர் தெள்ளத் தெளிவாகக் கூறியது போல இவ்வுலகில் நாம் வந்தது விளையாடுவதற்கு; எப்படி?

**"விதவிதமா நிலைகளெலாம் விசாரஞ் செய்து**
**மிச்சையறு பரமபதம் யாதொன் றுண்டோ**
**வதனையே திடமாக வகத்தாற் பற்றி**
**யனவரத முலல் விளை யாடு வீரா**
**வெகுசகல விதமான தோற்றங் கட்கு**
**மெதார்த்தமதா யகத்துளதோ வதைய றிந்தா**
**யதனாலப் பார்வையினை யகலா தென்று**
**மாசைபோ லுலகில்விளை யாடு வீரா!"**

பற்பலவிதமான நிலைகளையும் விசாரித்து, மெய்யாய் நின்ற அப்பரமநிலையையே திடமாக எப்போதும் உள்ளத்தில் பற்றி, உலக விவகாரங்களை விளையாட்டாகக் கருதி பணியாற்றுவாயாக. நானாவிதமான தோற்றங்கட்கும் ஆதாரமாய் எது உளதோ அதை நீ அறிந்தாய், ஆகையால் அதனை என்றும் மறவாது உலகப்பற்று கொண்டவன் போல் விளையாடுவாயாக.

**"போலிமன வெழுச்சிமகிழ் வுற்றோ னாகிப்**
**போலிமனப் பதைப்புவெறுப் புற்றோ னாகிப்**
**போலிமுயல் வாந்தொடக்க முற்றோ னாகிப்**
**புரையிலனா யுலகில்விளை யாடு வீரா**
**மாலெனும்பல் கட்டுவிடு பட்டோ னாகி**
**மன்னுசம னாகியெல்லா நிலைமைக் கண்ணும்**
**வேலைகள் வே டத்தியைவ வெளியிற் செய்து**
**வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா!"**

உற்சாக மகிழ்ச்சிகள் உற்றவன் போலவும், பதைப்பு வெறுப்பு கொண்டவன் போலவும், ஒரு காரியத்தைத்த தொடங்கி முயல்வான் போலவும், ஆனால் அவற்றில் யாதொரு பற்றும் அற்றவனாக, உலகில் விளையாடுவாயாக. பல்வகைப் பற்றுக் கட்டிலிருந்தும் விடுபட்டு, எல்லா நிலைகளிலும் நிலைபெற்ற சமசித்த முடையோனாகி வேஷத்துக்குத் தக்க வினைகளை



வெளியிற் செய்து இஷ்டப்படி உலகில் விளையாடுவாயாக.

இவ்வாறு பற்றுக்கட்டிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு நாம் இவ்வுலகில் விளையாடுவோமே யானால் நம்மை இச்சுழற்சி யினின்று விடுவித்துக் கொண்டு விடலாம்.

இம்மார்கழி திங்களில்:-

***“மண்ணை இருந்து துழாவி, வாமனன் மண்ணிது என்னும்***
***விண்ணைத் தொழுது அவன் மேவு வைகுந்தம் என்று கைகாட்டும்***
***கண்ணை உண்ணீர் மல்கநின்று கடல் வண்ணன் என்னும்; என்னே! என்***
***பெண்ணை பெருமயல் செய்தார்க்கு என் செய்கேன் பெய்வளையீரே!”***

என்று பிரபந்தம் காட்டும் அன்பு நிலைக்கு நம்மை பரிணமிக்கச் செய்ய வேண்டும்.

மற்றொரு படத்தைப் பற்றிக் கூறினேன் அல்லவா? “Matrix” என்ற திரைப்படம்.

எத்தனையோ நாட்கள், மனதில் ஏற்பட்ட எத்தனையோ எண்ணங்களால் மாறி, மாறி அலைக்கழிக்கப் பட்டிருக்கிறோம். அது சத்சங்கங்களையோ, அறிஞர்களின் வார்த்தைகளையோ நாடாத நாட்கள். எப்பொழுதுமே மனதில் ஓரே குழப்பம். பணத்திற்காக மதத்தையே துறந்து வேறு மதங்களை ஏற்று, அதுவும் இப்படி அசுர வேகத்தில் என்றெல்லாம் அலைகழிக்கப்படுகிறோம்? சரியாகக் கிடைத்தது சாட்டையடி.

‘சும்மா இருத்தல் சுகம்’

பகவானின் வாக்கு தான் இங்கும். நாம் யார் உலகியல் விசாரத்தை விட்டு ‘நான் யார்’ என்ற விசாரத்தில் ஈடுபடுவோம்!

*நான் இதை எழுதும் போது,*

"Be Still and know that I AM GOD. Stillness is the aim of the seeker. Even a single effort to still at least a single thought even for a trice goes a long way to reach the state of quiescence"

*என்பது போல இருந்தது நாள்காட்டியில் பகவானின் பார்வையும். அத்துடன்,*

*ப்ரஹதாரண்யக உபநிஷத்தின் வரிகளான:-*

***"அஸதோ மா சத்கமய***
***தமஸோ மா ஜோதிர்கமய***
***ம்ருத்யோர் மா அமிர்தம் கமய***
***ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி:!"***

**Lead Us From the Unreal To Real,**
**Lead Us From Darkness To Light,**
**Lead Us From Death To Immortality,**
**Aum (the universal sound of God)**
**Let There Be Peace Peace Peace.**

*கேட்கும் போதும் மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் தான் எங்கே?*

*மஹாத்மாகாந்திஜி சொன்னது போல அத்துணை இந்து நூல்களும் அழிந்து விட்டால் கூட உபநிஷத்தில் உள்ள ஒரு வரி போதும் மீண்டும் அது உயிர்த்தெழ. இது எவ்வளவு சத்தியமான வார்த்தை. "ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்!" இந்த அண்டம் முழுதும் இறையருளால் போர்த்தப்பட்டுள்ளது, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக!*

*வளரும்....*

# அருணை ரமணன் அருட்பதம் பணிவோம்

ராம் மோஹன்

அருணை யெனும்பதி அதிலொ ளிர்ந்திடும்
ஆன்ம ஜோதியாம் ஆசறு வானவன்
அறிஞ ரென்பவரும் அடிகள் தோயவரு
அமைதி தந்திடும் ஆதவன் மாதவன்
துரிய மென்னுமோர் துய்ய வெளியினில்
தூய வெண்சுடர் கதிரவ னொளியவன்
அறிவு செற்றிடும் புலனெ னும்பகை
அதனை மாய்த்திடும் ஆண்டகை மனமதில்
அசைவி லாததோர் அமைதி பூத்திட
அலையி லாததோர் ஆழியும் ஆக்குவன்
அருண கிரியினில் கதிரெ ழுந்ததென
அன்புராச்சிய ஆட்சியன் மாட்சியன்
தரைக டந்துவரும் தரள நித்திலக்
கவியெ ழுந்துவரு கடலு மொத்தவன்
வரையி லன்புடன் அருளும் ஆர்ந்திடும்
வடிவு கண்மலர் காட்சியன் நேர்த்தியன்
தகைமை கண்டுபல் பெரியர் தன்முனே
தலையைத் தாழ்த்திடும் தானுயர் மாட்சியன்
தமிழ கத்தினின் தவம் செயிக்கவரு
தருண மாமுகில் தாயவன் மாயவன்
தமிழைத் தந்தவோர் மதுரை பதிதனில்
மரணம் வென்றிடு பாலகன் பாவலன்
தகுதி ஓங்குமோர் கவிதை தந்திடும்
முருக வேதியன் தொழுகழல் தருநிகர்
அருள் நிழல்உறை அமரர் கோன் புகழ்
கழறுகின்ற தோர் கணபதி பணிபவன்
அமிழ் தெனும்தமிழ் கவிவி ளம்பி வரு
அருணை மாமுகில், அகமுக நோக்கெனும்
கலைய றிந்துவர விலையி லாததோர்
நிலைய டைந்திடு மெனமொழி பகர்பவன்

*மலைம ருந்தென மரண நோய்க்குமோர்*
*மரண மானநம் தேசிகன் தேவனும்*
*அனையை விஞ்சுமோர் அன்பின் ஆழியான்*
*மனமி ழந்தநிலை தருபவன் வரமுகில்*
*வான்வ யங்குமோர் வளிபோலு மென்னுளே*
*தானி யங்குமோர் தத்துவன் தாயவன்*
*தஞ்ச மென்றுதன் தாளைப் பற்றுவோர்*
*நெஞ்ச கத்தினில் நிலைபெறு நிர்மலன்*
*முக்தி என்றிடும் முடிவு தந்திடும்*
*சித்தி தன்னையே கரதல மருள்பவன்*
*செய்யு வினையுடன் செய்பவன் தானுமாய்*
*பைய வந்துநம் வினைபயன் ஆள்பவன்*
*மித்தை நீக்கியே சத்து சித்துமாய்*
*புத்தம் புதியதோர் பரசுகம் அருள்பவன்*
*அருள் பொழிந்திடும் அமுத வானவன்*
*அரிய ரமணனின் பதமலர் பணிகுவாம்!*



அருட்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| ஆசு | - | குற்றம் |
| ஆசறு | - | தூய்மையான |
| துய்ய | - | தூய |
| செற்றிடும் | - | அழிக்கும் |
| அனை | - | அன்னை |
| வளி | - | பிராணன் |
| மித்தை | - | மாயை |
| நித்திலம் | - | முத்து |
| முகில் | - | மேகம் |
| திரு | - | கல்பக விருட்சம் |
| கழறுதல் | - | பாடுதல் |

# *ரிபு கீதை*

## *தியாகராஜன்*

*“பரப்பிரம்மம் தனக்கயலாய்க் காண்பா னில்லை*
*பரப்பிரம்மம் தனக்கயலாய்க் காட்சி யில்லை*
*பரப்பிரம்மம் தனக்கயலாய் யாருமில்லை”*

*(ரிபு.கீ 17.17)*

*“எனக்கயலாய்த் தூலமுதற் றேக மில்லை*
*எனக்கயலாய் நனவுமுத லவத்தை யில்லை*
*எனக்கயலாய் விசுவன் முதலாரு மில்லை*
*எனக்கயலாய்ச் சமட்டிவியட் டிகளு மில்லை*
*எனக்கயலா யாந்தரமாஞ் சகத்து மில்லை*
*எனக்கயலாய் வாகியமாஞ் சகத்து மில்லை*
*எனக்கயலா யெவையுமிலை பிரம மேநா*
*னென்றுரமா யிருந்திடுவோன் சீவன் முத்தன்”*

*(ரிபு.கீ 8.8)*

*(வசனாம்ருதம் - பாகம் 2-11-12) ஸ்ரீ பகவான் - ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் உடல் நானேயாம். ஆனால் அஞ்ஞானி “நான் இருக்கிறேன்” என்னும் உண்மையை உடலளவாய்க் குறுக்கிக் கொள்கிறான், அதாவது உடலே நானென்று. தூக்கத்தில் உடலை அபேக்ஷியாமலேயே “நான்” என்பது சுதந்திரமாயிருக்கிறது. அதே “நான்” தான் விழிப்பு நிலைமையில் இப்போதும் இருக்கிறது. “நான்” என்பது உடலுக்குள்ளே இருப்பது போலத் தோன்றினாலும் அது உடலற்றதேயாம். உடல் ஜடமாதலின் அது உடல் “நான்” என்று சொல்லாது. ஆத்மாவுக்கு ஏதோவொன்றைப் பற்றிய நான் என்னும் எழுச்சியில்லை. இடையில் ஏதோவொன்று கிளம்பி உடல் “நான்” என்று சொல்கிறது. அது உடலின் இயக்கங்களைத் தனதாய் அபிமானித்து வருந்துகிறது. அவ்வகந்தையற்றுத் தூய அஹம்ஸ்புரணமாய் விளங்குபவனே ஞானி. அவனுக்கு உடலும் உள்ளதனைத்தும் நானேயாம். அவன்*



உடலுக்கு எது நேரினும், அத்துடன் சம்பந்தப் படாது என்றும் ஆனந்தமயமாகவே இருப்பான்.

கேள்வி - ஞானிக்கும் உடல் நானேயெனின் சாவின் போது அவனுக்கு என்ன நேருகிறது?

ஸ்ரீ பகவான் - இப்பொழுதே, அவன் உடலாய்த் தன்னைக் குறுக்கிக் கொள்ளவில்லையே!

கேள்வி - ஞானிக்கும் உடல் நானேயென்று சற்று முன் சொன்னீர்களே?

ஸ்ரீ பகவான் - ஆம், ஞானிக்கு "நான்" என்பதற்கு அன்னியம் எதுவும் இன்மையால் உடலும் அதனுள் ஒடுங்கும். உடல் நசிப்பினும் அவனது நானாகிய ஆன்மாவிற்கு அழிவேதும் இல்லை. உடல் ஜடமாதலின் அதற்கு "நான்" என்னும் பான்மையில்லை. உண்மை நானாம் ஆன்மாவுக்குச் சாவில்லை. அது எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது. உடலோ ஜடமாதலின் எக்கேள்வியையும் கேட்காது. கேள்வி கேட்பது யார்?

- (அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - 210-11)

கேள்வி - ஞானி இரண்டு நிலைகளில் இல்லையென்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? உலகில் நம்முடன் நம்மைப் போலவே நடமாடுகிறார். நாம் காணும் பல பொருள்களை அவரும் காண்கிறார். அவர் அவற்றைப்

பார்க்கவில்லை என்பதில்லை. உதாரணமாக, அவர் நடந்து கொண்டிருக்கிறார். தான் நடக்கும் பாதையைக் காண்கிறார். ஒரு நாற்காலியோ, மேஜையோ வழியில் இடையூறாக வைக்கப்பட்டுள்ளதென்று வைத்துக் கொள்வோம். அவர் பார்க்கிறார், பின் அவற்றைத் தவிர்த்து சுற்றிப் போகிறார். அதனால் உலகத்தையும் பொருள்களையும் பார்க்கிறாரென்று ஒப்புக் கொள்ள வேண்டாமா?

ஸ்ரீ பகவான் விளக்கினார் "ஞானி பாதையைப் பார்க்கிறார், நடக்கிறார், தடங்கல்கள் எதிர்ப்படுகின்றன, அவற்றைத் தவிர்க்கிறார், என்றெல்லாம் சொல்கிறாய். யார் பார்வையில் இதெல்லாம்? ஞானியுடையதா, அல்லது உன்னுடையதா? ஞானி ஆன்மாவை மட்டும்தான் பார்க்கிறார். அனைத்தையும் ஆன்மாவில் பார்க்கிறார்.

கேள்வி - நமது புத்தகங்களில் இந்த சகஜ நிலையை எங்களுக்கு ஐயமற விளக்குவதற்கு உதாரணங்கள் தரப்பட்டுள்ளனவா?

ஸ்ரீ பகவான் - இல்லாமலென்ன? உள்ளன. உதாரணமாக, கண்ணாடியில், ஒரு பிரதிபிம்பத்தையும் கண்ணாடியையும் பார்க்கிறாய், கண்ணாடியை உண்மையென்றும், பிம்பம் வெறும் பிரதிபலிப்பென்றும் உனக்குத் தெரியும். கண்ணாடியைப் பார்ப்பதற்கு, பிம்பத்தைப் பார்க்காமலிருக்க வேண்டுமா? அல்லது திரைப்படத்தின் உபமானத்தை எடுத்துக் கொள், ஒரு திரை இருக்கிறது. அதில் ஒரு உருவம் வருகிறது. அதே திரையில், வேறு படங்கள் தோன்றுகின்றன, முதல் உருவம் அந்தப் படங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது. நீ திரையானால், திரையென்று அறிந்தாயானால், முதல் உருவத்தையும் மற்ற படங்களையும் பார்க்காமல் இருக்க வேண்டுமா? திரையை அறியாத போது நீ உருவத்தையும் படங்களையும் பார்க்காமல் இருக்க வேண்டுமோ? திரையை அறியாத போது நீ உருவத்தையும் படங்களையும் நிஜமென நினைக்கிறாய். ஆனால் திரையை உணர்ந்து,

*அது மட்டுமே உண்மை, இதை அடிப்படையாகக் கொண்டு தான் உருவமும் படங்களின் நிழல்களும் விழுகின்றன என உணர்ந்தால், அவை வெறும் நிழல்களே என அறிவாய். நிழல்களை, அவை நிழல்கள் மாத்திரமென பார்த்து, உன்னை அவற்றிற்கு ஆதாரமான திரையெனவும் உணர்வாய்.*

*(இதையே உள்ளது நாற்பது முதற் பாடலில் ஸ்ரீ பகவான் விளக்கியுள்ளார்).*

*(அனுதினமும் - 110)*

*ஸ்ரீ பகவான் - நம் எல்லோரிடமும் உள்ள குறை என்னவென்றால், நாம் கடந்த காலத்தில் எவ்வாறு இருந்தோம், எதிர்காலத்தில் எப்படி இருப்போம் என்று தெரிந்து கொள்ள முற்படுகிறோம். ஆனால் கடந்த காலத்தைப் பற்றியோ, வரப் போவதைப் பற்றியோ நமக்கு எதுவும் தெரியாது. நிகழ்வது தெரியும், இப்போது நாம் இருக்கின்றோமென்பது தெரியும். நேற்றும் நாளையும் இன்றைய தினத்தைப் பொருத்தே உள்ளன. நேற்றை அப்போது "இன்று" என்றழைத்தோம். நாளையையும் "இன்று" என்று நாளைக்குச் சொல்வோம். "இன்று" எப்போதுமுள்ளது. எப்போதுமிருப்பது, சுத்த இருப்பு "சத்". அதற்கு இறந்த காலமும், எதிர்காலமும் இல்லை. நிகழ்காலத்தின் உண்மை இயற்கையை - நிரந்தர, சாச்வத இருப்பு நிலையைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வதற்கென்ன?*

*கேள்வி - நிகழ்வது பூர்வ கர்மத்தைப் பொறுத்தது. பூர்வ கர்மாவை இப்போது நமது சுய முயற்சியால் வெல்ல முடியுமா?*

*ஸ்ரீ பகவான் - நான் சொன்னது போல் நிகழ்வது என்ன என்று அறி. அப்போது அது எதைப் பாதிக்கிறது, இறந்த காலம் இருக்கிறதா அல்லது எதிர்காலம் உள்ளதா என்பது தெரியும். மேலும் அது எப்போதுமுள்ளது, சுதந்திரமானது, நிகழ்கால எதிர்காலங்களாலோ, பூர்வ கர்மத்தாலோ அது பாதிக்கப்படாதது என அறிவாய்.*

*(அனுதினமும் - 276) - "அத்வைத உண்மை" எனும் தமிழ்ப் புத்தகத்திலிருந்து, ஜீவன் முக்தனைப் பற்றிய எல்லாச் சந்தேகங்களும் கேட்கப்பட்டு, நிவர்த்தியாக்கப்படும் பகுதியை பகவான் படித்துக்காட்டி அருளியது.*

*வாழ்க்கைக்கும் செயலுக்கும் மனதின் உதவி தேவைப் பட்டாலும், மனமில்லாமல் ஞானி எப்படி வாழ்ந்து செயல்படுகிறான் என்பதை நாம் புரிந்து கொள்ளச் செய்வதற்காக அனேக உதாரணங்கள் புத்தகங்களில் தரப்பட்டுள்ளன. பானை உருப் பெற்றுவிட்டதென்று, குயவன் சக்கரத்தைச் சுழற்றுவதை நிறுத்திவிட்ட பின்னும் அவனுடைய சக்கரம் எப்படிச் சுழன்று கொண்டிருக்குமோ, மின்சாரத்தை நிறுத்திய பின்னரும் மின்சார விசிறி சில நிமிடங்களுக்கு எப்படிச் சுழல்கிறதோ அவ்வாறே உடம்பை சிருஷ்டித்தி பிராரப்தம் அந்த உடம்பு எதற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அவற்றைச் செய்விக்கும். ஆனால் ஞானி தான் செய்கின்றோம் என்ற உணர்வில்லாமல் அனைத்தையும் செய்கிறான். இது எப்படி என்று புரிந்து கொள்வது கடினம். பொதுவாக இதற்குக் கொடுக்கப்படும் உதாரணம் என்னவென்றால், குழந்தையைத் தூக்கத்தில் இருந்து எழுப்பி உணவூட்டினால் உண்கிறது, ஆனால் மறுநாள் காலை, தான் உண்டது அதற்கு நினைவிருப்பதில்லை - இது போலவே ஞானி செயல்படுகிறான். நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது என்ன என்றால், இந்த விளக்கங்களெல்லாம் ஞானிக்கல்ல. அவன் அறிவான், அவனுக்கு சந்தேகம் ஒன்றுமில்லை, தான் இந்த உடம்பு இல்லையென்றும், தேகம் ஏதாவது செயலில் ஈடுபட்டிருந்தாலும், தான் ஒன்றும் செய்யவில்லை என்றும் அவனுக்குத் தெரியும். இந்த விளக்கங்களெல்லாம் ஞானியைச் சரீரமுடையவன் என்று நினைத்து அவனைச் சரீரமாக அடையாளம் கண்டு கொள்ளுவதைத் தவிர்க்க முடியாத பார்வையாளருக்கு மட்டுமே.*

*(திருவருண்மொழி - 84)*

*ஸ்ரீ பகவான் - அஞ்ஞானியும், ஞானியும் இருவரும் உலகத்தைப் பார்க்கின்றார்கள். எனினும், அவர்கள் திருஷ்டியில் பேதமிருக்கிறது. திரையில் உலகமெல்லாம் காணப்படுகிறது. ஆயினும் அங்கே வாஸ்தவமாயிருப்பது திரையொன்றே. திரை மீது தோன்றும் காட்சிகளெல்லாம் தீர்ந்தபின் இருப்பதென்ன அப்பொழுதும் திரையொன்றே இருக்கிறது. அவ்வாறே, உலகம் தோன்றும் போது அது யாருக்குத் தோன்றுகின்றதென்று கவனித்து, 'அதிஷ்டான அஹம் ஸ்வரூபமே நாமென்றுணர்ந்தால்', உலகம் தோன்றுவதாலும் மறைவதாலும் நாம் சற்றும் பாதிக்கப்படுவதில்லை. அஞ்ஞானி உலகத்தை மெய்யென்று நினைக்கிறான், ஞானியோ, உலகம் தனது அகண்ட ஸ்வரூபத்தில் தோன்றி மறையும் ஓர் காட்சியே! என்று உணர்ந்திருக்கிறான். உலகம் தோன்றுவதாலோ, மறைவதாலோ ஞானிக்கு ஓர் ஹானியுமில்லை.*

*(அனுதினமும் - 435)*

*ஞானி என்ன செய்கின்றான், எதையும் ஏன் செய்கின்றான்? என்று நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். நீங்கள் உங்களை இந்த உடம்பென்று நினைக்கின்றீர்கள். ஞானி தனக்கு சரீரம் இருப்பதாகச் சொல்கிறானா? அவனுக்கு உடல் உள்ளது போலவும் மற்றவர் போல அவன் வேலை செய்வது போலவும் உங்கள் பார்வைக்குத் தோன்றும். ஆனால் அது எரிந்த கயிறு போல - பார்வைக்கு கயிறு போலத் தோன்றும், ஆனால் அதனால் எதையாவது கட்ட முனைந்தால், அது கயிறு போல் பயன்படாது. ஒருவன் தன்னை உடலுடன் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் வரை இவற்றைப் புரிந்து கொள்வது கடினம். எனவேதான் ஞானியின் உடல் பிராரப்தம் தீரும் வரை இருக்கும் என்று சொல்லப் படுகிறது. ஆனால் பிராரப்த கர்மம் உட்பட அனைத்தையும் கடந்தவன் ஞானி (உள்ளது நாற்பது அநுபந்தத்தில் 33ம் பாடலில் ஸ்ரீ பகவான் இதை விளக்கியுள்ளார்).*

# பகவானின் பக்தருள் - நடேச அய்யர்

## Dr. நிரஞ்சன்

“பகவான் வந்துவிட்டாரா? இதோ நான் வந்து கொண்டே இருக்கிறேன்!”. பகவான் ரமணரின் சன்னதி மகிமையினால் மனம் அடங்கி மலம் அகன்று கன்மக்கட்டில் இருந்து விடுபட்டவர் பலர். சொல்லப்பட்ட, எழுதப்பட்ட நிகழ்ச்சிகள் மூலமாக நாம் பலரை இவ்வாறு தூய்மை அடைந்தோராக நினைக்க முடிகிறது. ஆனால் அவ்வாறாக வெளிவராத நிகழ்ச்சிகள் பகவானின் சன்னிதியில் பல நிகழ்ந்திருக்க வேண்டும். பகவானை அடைந்தவர்கள் கணக்கில் அடங்கார். பெயர், ஊர் தெரியாது வந்து இருந்து உய்வு அடைந்து சென்றுவிட்ட அவர்களைப் போல், அவர்கள் ஒவ்வொருவர் உள்ளும் நிகழ்ந்த உன்னத அனுபவமும் நமக்குத் தெரியாத ஒன்றே! பசுவிற்கும், நாய்க்கும், காக்கைக்கும், மானிற்கும், கிளிக்கும் முக்தி அளித்த மூல சன்னிதி அன்றோ ரமண சன்னிதி.

“தேவர்களும், ரிஷிகளும், பிரம்மநிஷ்டர்களும், சித்தர்களும், யோகிகளும் ஞானி ஒருவரின் சன்னிதியை நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். அவர்கள் சாதாரண மனித உருவிலோ, சூட்சும உருவிலோ வருகின்றனர். இப்பெரியோர்களுள் சிலர் பிச்சைக்காரர்களாகவும், பைத்தியக்காரர்களாகவும், மேலும் பறவைகள், விலங்குகள் போன்ற உருவங்களிலும் காட்சி அளித்திருக்கின்றனர்”, என்று ஒரு முறை விஸ்வநாதசுவாமியிடம் பகவான் பகன்றுள்ளார்.

"இதற்குத் தொண்டு இதுவே!" என்று உத்தண்டி நாயனாருக்கு எழுதிக் காட்டியதிலிருந்து, தன் அன்னை முதலாகி, எத்துணை அடியவருக்கு அருள் பாலித்திருக்கிறது குருவின் மோன சந்நிதானம். குருவின் சந்நிதானத்தைச் சற்றும் அகலாது திடமாகப் பற்றிய அடியவர்களுள் நடேச அய்யரும் ஒருவர். அதிகம் படித்திராதவர், சாஸ்திர ஞானம் அற்றவர், உயர் பதவி இல்லாதவர், பாமரர், சாமானியர், கோயிலில் சந்தனம் அரைப்பவராகப் பணியாற்றிய எளியவர், சொத்து, சுகம் இல்லாதவர். முதலில் திருவண்ணாமலைக் கோயிலிலும், பின்னர் ஸ்ரீரமண ஆஸ்ரமச் சமையலறையில் உதவிப் பணியாளராகவும் வேலை பார்த்து அதன் மூலம் வாழ்க்கையின் எளிய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வாழ்ந்தவர்.

நடேச அய்யர் பயந்த சுபாவம் உடையவர், எதிர்த்துப் பேசத் துணிவு இல்லாதவர். சிதம்பரத்தில் மனைவி மகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர், திடீரென்று அவர்களை விட்டுவிட்டுத் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். இதற்கு காரணம், அவரது மனைவி அவரை அடக்கி வேலை வாங்கிக் கொண்டிருந்ததும், ஏவலாளனாக நடத்துவதைச் சகியாமலும், எதிர்க்கத் துணிவில்லாமலும் இவர் இருந்ததும் ஆகக்கூட இருக்கலாம்.

திருவண்ணாமலைக் கோயிலில் பரிசாரகராக வேலை பார்த்தார். நாள் முழுவதும் சந்தனம் அரைப்பதே வேலை. வேலை செய்து, செய்து அவரது கைகள் நரம்புத் தளர்ச்சி அடைந்தன. அதன் காரணமாக, அவை தாமாக நடுங்கிக் கொண்டே இருக்குமாம். இருந்தும் ஆச்ரமத்தில் உணவுக் கூடத்தில் பரிமாறுகின்ற சமயம் ஒரு நாளும், ஒரு பொருளையும் கூடச் சிந்தியது கிடையாதாம்.

1930களின் இடைக்காலத்தில் முதன் முதலில் நடேச அய்யர் பகவானைத் தரிசித்திருக்கின்றார். "எனக்கு ஒன்றும் தெரியாது, பகவானிடம் ஏதாவது உபதேசம்

கேட்க விரும்புகிறேன்” என்று கூறியிருக்கின்றார். “உமக்கு ஒன்றும் தெரியாது என்றீர்கள் அல்லவா? தெரியாது என்கின்ற அந்த அறிவின் உண்மையைக் கண்டுபிடியுங்கள். அதுவே முக்தி”, என்று குருவின் உபதேசம் கிடைத்தது. பகவானுடன் உரையாடல்கள் என்னும் ஆங்கில நூலில் அது பன்னிரெண்டாவது உரையாடலாக வருகின்றது.

முதல் தரிசனத்தில் என்ன நடந்ததோ தெரியவில்லை. ரமணர் அவருடைய குருவானார். நிரஞ்சனானந்த சுவாமிக்குப் பிறகு ஆசிரமத் தலைவராயிருந்தவர், அவருடைய குமாரரான டி.என் வேங்கட்ராமன் ஆவார். அக்காலத்தில் டி.என் வேங்கட்ராமன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் திருவண்ணாமலை நகரில் குடியிருந்தார். அவருடைய இரண்டாவது மகன் கணேசன் ஆவார். அவர் பள்ளி மாணவனாயிருந்த சமயம் நடேச அய்யர் அவருடைய கையில் நாணயம் ஒன்றினை வைத்து, “நீ எனது குருவின் குடும்பத்தைச் சார்ந்தவன். இதை வைத்துக் கொள்”, என்பாராம். அப்பொழுது நடேச அய்யருக்குக் கோயிலில் கூலி இரண்டு ரூபாய்களே! பிற்காலத்தில் ஆச்ரமத்தின் சமையலறையில் உதவியாளராகப் பணியாற்ற வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. மனமுவந்து ஏற்றுக்கொண்டார். குருவின் இருப்பிடத்திலேயே இருந்து கொண்டு, அவருக்குப் பணி செய்து கொண்டு இருப்பதுவும், அவரைத் தரிசிப்பதுவும், அவரது உபதேசங்களை உட்கொள்வதுவும் கிடைத்தற்கரிய வாய்ப்பு அன்றோ?

இளம் பருவத்தில் நடேச அய்யர் காஞ்சிப் பெரியவரின் பள்ளித் தோழனாயிருந்தவர். சந்நியாசம் எடுத்துக் கொண்டு காஞ்சியில் தங்க வாய்ப்புக் கிடைத்தது. குரு ரமணரின் அருளால் ஈர்க்கப்பட்ட நடேச அய்யர் அவ்வாய்ப்பை ஏற்கவில்லை.

குரு பக்தி ஒரு புறம் இருந்த போதிலும், பழம் பிறவிப் பயன்களினால் உந்தப்பட்டு நடேச அய்யர்

"பஞ்சயதன பூஜை" ஒன்றினைச் செய்து வருவது உண்டு. ஆச்ரமத்திலோ அனைத்து வழிபாடும் அன்னையின் ஆலயத்திலேயே நடக்க வேண்டும். நடேச அய்யர் பஞ்சயதன பூஜை தொடர்ந்து செய்வதற்கு பகவானின் அனுமதியை வேண்டினார். பகவான் அளித்த ஒப்புதலுடன் மாட்டுத் தொழுவத்திற்கு அருகில் பூஜையைச் செய்து வந்தார். காலை ஒன்பது மணிக்கு பகவான் மாட்டுத் தொழுவத்திற்கு வருவது வழக்கம். அதற்கு முன்னர் பூஜையை முடித்துவிட்டு, விக்கிரகங்களை பகவானிடம் காட்டி மகிழ்வார் நடேச அய்யர். வருடங்கள் இரண்டிற்குப் பின் ஒரு நாள் நடேச அய்யர் வழக்கம் போல் விக்கிரகங்களைக் காட்டினார். பகவான் அவரை நோக்கி, "இன்னுமா இதைச் செய்து கொண்டிருக்கின்றனை?" என வினவினார். கேட்ட மாத்திரத்திலேயே நடேச அய்யரின் உடல் சிலிர்த்தது. இவ்வழக்கத்தை விட்டுவிடும்படி குரு உபதேசிக்கின்றார் என்று உணர்ந்தார். தயக்கமின்றி அவ்விக்கிரகங்கள் அடங்கிய சிறிய பெட்டியை பக்தியோடு கூடி பாலிதீர்த்தத்தில் எறிந்தார். இதற்கு மனம் வருந்தினாரும் இல்லை, கலங்கினாரும் இல்லை. மாறாக, குருவிடமிருந்து முக்கிய உபதேசம் கிடைத்ததை உணர்ந்து குருவைப் பரிபூரணமாகச் சரணடைந்தவராய் மகிழ்வுற்றார். சித்தசுத்திக்கான சாதனைகளுள் ஒன்றினைச் செய்து முடித்துவிட்டார் போலும், மேலும் அவரை உள் முகப்படுத்த குரு திருவுளம் கொண்டார் போலும்.

பயந்த சுபாவம், எதிர்த்துப் பேசத் துணிவின்மை, இவற்றால் ஒடுக்கப்பட்ட நடேச அய்யரின் சுபாவத்தினால், சமையலறையில் தன்னை ஓயாது அதிகாரம் பண்ணி வேலை வாங்கும் மாதர் மீது கோபம் அடிக்கடி பற்றிக் கொண்டுவரும். அப்பொழுதெல்லாம் அவர் வெளியே சென்று மண்ணில் புரண்டவாறு கத்திக் கொண்டே இருப்பார். குழந்தைத்தனமான அந்தக் கோபம் சற்று நேரத்தில் சுவடு தெரியாமல் அடங்கிவிடும். அவருடைய பலவீனத்தைக் கண்ணுற்றவர்

அவரைச் சீண்டி கோபம் வரவழைப்பதும் வழக்கம். கோபம் கொள்வது தவறு, எவ்வளவுதான் நியாயமாக இருந்தாலும், கோபம் கொள்வது தவறே என்று உணர்ந்தும், கோபத்தை அடக்க இயலாது தவித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் தன் கோபத்தை அடக்க இயலாமை குறித்து பகவானிடம் சொல்லிக் கொண்டிருந்தவர், இதற்கு மருந்தாக மலைவலம் சென்று வரலாமா? என அவரையும் அறியாமல் கேட்டிருக்கின்றார். பகவான் முகம் மலரச் சிரித்துத் தலை ஆட்டி ஒப்புதல் கொடுத்தார். அதன் பின்னர் ஒவ்வொருமுறையும் கோபத்தைத் தணிக்க, பகவானை முதலில் வணங்கிவிட்டு மலைவலம் மேற்கொண்டார். கோபத்தை அடக்குவதற்காக அவர் மலைவலம் செல்வதைப் பகவான், சில சமயம் குறிப்பிட்டுச் சொல்வது கேட்டு, குருவின் அருட்பார்வை தன் மீது பட்டிருப்பதை உறுதிபட உணர்ந்தார்.

இருந்தும், சமையலறையில் அவர் பட்ட கஷ்டம் பொறுமையின் எல்லையைத் தாண்டிய சமயம், ஒரு நாள் அதிகாலையில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் பகவானை மட்டும் வணங்கிவிட்டு, ஆச்ரமத்தை விட்டு வெளியேறினார். சிதம்பரத்திற்கே திரும்பிக் கொண்டிருந்த அவர் தொடர்ந்து நாற்பது மைல்கள் நடந்து அன்று மாலை விழுப்புரத்தை அடைந்தார். அருகிலிருந்த குளத்தில் குளித்துவிட்டு, அங்கே இருந்த புளியமரத்தின் கீழே படுத்து உறங்கிவிட்டு அடுத்த நாள் பயணத்தைத் தொடர இருந்தார். இரவு படுக்கும் முன், நெற்றியில் நீறு அணிந்து, கண்களை மூடி, மானசீகமாக பகவானைத் துதித்தார். அவர் கண்கள் திறந்த பொழுது பகவான் நேராகத் தன் முன் நிற்கக் கண்டார்.

வியப்பாலாழ்ந்தவர், “நீங்கள் எவ்வாறு இங்கே வந்தீர்கள்?” என வினவினார்.” எவ்வளவு தூரம் என்னை விட்டுச் சென்று விட்டனை?” என்று பகவான் புன்னகைத்தவாறே பதில் கொடுத்தார். பதில் ஏதும் கொடுக்க முடியாது நடேச அய்யர் கண்ணீரால் உருகிக்

கரைந்தார். தோன்றிய பகவான் திருவண்ணாமலையை நோக்கி நடக்கலானார். நெடுந்தொலைவு நடந்து களைத்திருந்தும், தயக்கம் ஏதும் இன்றி பகவானைப் பின் தொடர்ந்து நடக்கலானார் நடேச அய்யர். தோன்றிய பகவான் மறைந்தார். இருந்தும், நடேச அய்யர் பகவான் தனக்கு முன்னால் சென்றவாறு தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்வதாய் உணர்ந்தார். அடுத்தநாள் காலை ஆச்ரமக் கூடத்திற்குச் சென்று, பகவானை வணங்கினார். அப்பொழுது விழுப்புரத்தில் தோன்றிய அதே புன்னகையோடு பகவான் "எவ்வளவு தூரம் என்னை விட்டுச் சென்று விட்டனை?" என்ற அதே கேள்வியைக் கேட்டார். உணர்ச்சியை அடக்க முடியாத நடேச அய்யர் கண்ணீரில் கரைந்தார். பகவானிடம் பதில் ஏதும் கூறாமல் சமையலைறைக்குச் சென்றார். அன்றிலிருந்து அவமானத்தைத் தாங்கலானார், மனம் நோவதைத் தவிர்த்தார். குருவின் தாள்களில் தஞ் சமடையும் சரணாகதி சாதனை ஆரம்பமாயிற்று. சிறிது, சிறிதாக அது வலுவடைந்து உன்னதமாயிற்று.

"உன்னத சரணாகதி" நிலையில் குருவின் சொரூப உண்மையை உணரும் பேறு கிட்டியது.

சுவாமி ரமணானந்தரிடம் அவர் இதனை விளக்குகின்றார்: "பகவான் மனதால் அறியப்படும் பொருளோ, மனிதரோ இல்லை. அதுதான் உண்மை என்று பகவானைப் பற்றிச் சொல்வதற்கு நமக்குச் சக்தியும் இல்லை, ஞானமும் இல்லை. எப்பொழுது பகவானது உண்மையின் ஆழத்தினை நம்மால் அறியமுடியாது என்று ஒப்புக்கொள்கிறோமோ, எப்பொழுது அவரைப் புரிந்து கொள்ளவேண்டும், அவரை விளக்க வல்லவராக வேண்டும் என்னும் ஆர்வத்தை அவரிடமே சமர்ப்பித்து, மனம் அடங்குகிறோமோ, அப்பொழுது ஆழ்ந்த மோனத்தில் ஆழ்ந்துவிடுவோம். அம்மோனமே நம்முள் விளங்கிக் கொண்டிருக்கும் உண்மையான பகவானை நாம் அனுபவித்து அறிதலாகும். இது தான் எனக்கு ஏற்பட்டது. பகவானைப் பற்றி என்னால் எதுவும்

சொல்ல இயலாது. ஏனெனில் உண்மையான பகவான் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவர். அது ஒரு இனிய ருசி. ஒவ்வொருவரும் ருசித்துத்தான் அதைத் தெரிந்து கொள்ள முடியும்."

இன்னும் வரும்....

---

# இனிவரும் திருநாட்கள் . . .

## ரமண பக்தர்களுக்கு விசேஷ நாட்கள் - 2011

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 15 | சனி | பொங்கல் |
| | 19 | புதன் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 22 | செவ்வாய் | சுந்தரம் ஐயர் தினம் |
| மார்ச் | 2 | புதன் | மஹாசிவராத்திரி |
| | 18 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| ஏப்ரல் | 4 | திங்கள் | தெலுங்கு வருட பிறப்பு |
| | 12 | செவ்வாய் | ஸ்ரீராமநவமி |
| | 14 | வியாழன் | தமிழ் வருட பிறப்பு |
| | 30 | சனி | ஸ்ரீபகவான் ஆராதனை |
| மே | 26 | வியாழன் | மஹாபூஜை |
| ஜூலை | 12 | செவ்வாய் | பசு லட்சுமி தினம் |
| ஆகஸ்டு | 13 | சனி | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | வியாழன் | பகவான் அருணையடைந்த தினம் |
| | 28 | புதன் | நவராத்திரி விழா ஆரம்பம் |
| அக்டோபர் | 5 | புதன் | சரஸ்வதி பூஜை |
| | 6 | வியாழன் | விஜயதசமி |
| | 26 | புதன் | தீபாவளி |
| நவம்பர் | 29 | செவ்வாய் | கார்த்திகை உற்சவம் தொடக்கம் |
| டிசம்பர் | 8 | வியாழன் | கார்த்திகை தீபத் திருநாள் |

# மனம் - இயக்கமும் அடக்கமும்

## **Dr. S.** *ராமகிருஷ்ணன், சங்கரநேத்ராலயா*

### *மூன்று அவஸ்தைகள்*

*ஒவ்வொரு மனிதனும் நாள்தோறும் மூன்று அவஸ்தைகளை அனுபவிக்கிறான். அவை விழித்திருத்தல் (ஜாக்ரத்), கனவு காணுதல் (ஸ்வபன), அயர்ந்த தூக்கம் (சுஷுப்தி).*

*அயர்ந்த தூக்கத்தில் மனம் செயல்படாது. வாஸனைகளைப் பிரதிபலிக்காமல், உள்முகமாகத் திருப்பி (அந்தர்முகம்) ஆத்ம ஜோதிக்கு நேர் எதிரே அமையும். அதனால் வாசனைகள் மனத்தால் பிரதிபலிக்கப் படமாட்டா. மனதும் தன் செயலிழந்து நிற்கும். இதை பகவான் ரமணர் பகலில் சூரியன் நேரே நோக்கும் சந்திரனுக்கு ஒப்பிடுகிறார். பகலில் சந்திரன் ஒளியிழந்து வெண்தகடாகக் காட்சியளிக்கிறான். அவரால் பூமிக்கு ஏது பிரகாசம்? ஆகவே தூக்கத்தில் எண்ணங்கள் இல்லை. 'நான்' எனும் அகந்தையும் உதிக்கும் இடத்தில் அடங்கியிருக்கும். 'நான்' இன்றேல் ஏது எண்ணம்! ஆத்மாதான் நாம் தூங்கும் போது தன் ஆனந்த நிலையில் இருக்கிறார். அதனால் தான் யாவரும் ஆழ்ந்த நித்திரையில் ஆனந்தத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் அந்தக்கரணம் அடங்கிய நிலையில் தூங்கும் போது ஆனந்த அனுபவத்தை உணர்வதில்லை. விழித்தபின்தான் ஆனந்தத்தை அனுபவித்ததாக உணர்கிறார்கள்.*

*ஸ்வப்னாவஸ்த்தையில் மனம் மட்டும்தன் செயலைச் செய்கிறது. பிரபஞ்சத்தையே சிருஷ்டி செய்து தன்னையும் சிருஷ்டி செய்கிறது. ஆனால் புத்தி, அஹங்காரம், இந்திரியங்கள், உடல் இவை செயலற்றிருக்கின்றன. ஆத்மா (தான்) இந்த அவஸ்தையில் சைதன்யத்தை மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மனத்தின் சேஷ்டைகளால் ஆத்மாவின் உண்மை ஸ்வரூபமான ஆனந்தம்கிட்டுவதில்லை. விழிப்பு அவஸ்தையில் அந்தக்கரணம் குறிப்பாக மனம், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் எல்லாம் செயல்படுகின்றன.*

*ஒருவன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவுடன் அவனுக்கு முதன் முதலாக வரும் எண்ணம் 'நான்' என்ற அகந்தையே. 'நான்' இவ்வுடலுடன் கூடியவன், இப்பெயருள்ளவன், இதுவே தன்மை. இந்த எண்ணம் வந்தபிறகு மனம் செயல்பட்டு அனைத்து எண்ணங்களும் ஒன்றன் பின் ஒன்றாய் வெளிப்படும். இந்த 'நான்' போலி நான், சிறிய நான். ஏனெனில் இது ஆத்மாவைக் குறிப்பதல்ல. பெயருடன் கூடிய உடம்பையே குறிப்பிடுகிறது. இது எழுவதோ, உண்மையான ஆத்மாவான நான்-பெரிய நானிலிருந்து. இப்பெரிய நானை இனி 'தான்' என்று கூறுவோம். ஒருவன், தன்னைத்தான், ஆத்ம ஸ்வரூபத்தைத்தான் அனுபவிக்க வேண்டும். அதுதான் சத், சித், ஆனந்தம், உள்ள பொருள், உள்ள உணர்வு, சுகம்.*

*போலி நானால் - அகந்தை நானால் - மனம் வெளி விஷயங்களில் ஈடுபட்டால் கிடைப்பது துக்கமே. போலி நான் 'தான்' எனும் ஆத்மாவினின்று கிளம்புவதால், அகந்தை - போலி -நானைப்பற்றிக் கொண்டு அதன் வழியே விசாரணை மூலம் 'தான்' எனும் உண்மைப் பொருளை உணர்ந்து அனுபவிக்க வேண்டும். போலி நானை, அகந்தையை அழித்துவிட்டால் எல்லா எண்ணங்களும் அழிந்து முடிவில் நானும் அழிந்து 'பிணம் சுடும் தடி' போல் எல்லாம் அழிந்து மீதமிருப்பது ஆனந்தமான 'தான்' தான்.*

துரீயாவஸ்தை என்பது மேற்குறிப்பிட்ட மூன்று அவஸ்தைகட்கும் மேலான நிலை. சுஷுப்தியில் உள்ளதைப் போல் அந்தக்கரணம் செயலிழந்துவிடும். மனமும் எண்ணங்களும் இல்லாததால் ஆனந்தானுபவம் ஏற்படும். ஆனால் விழித்துக் கொண்டே மனம், எண்ணங்கள் இல்லாமல் இருப்பதால், அந்த ஆனந்தத்தை அப்போதே அனுபவிக்கலாம். இதையே ஜாக்ரத் - சுஷுப்தி என்கிறார்கள். அதாவது விழித்துக் கொண்டே ஆழ்ந்த நித்திரையில் கிடைக்கும் ஆனந்தானுபவம், இதைத்தான் ஆத்மாராமர்கள் எனப்படும் ஞானிகள், யோகிகள், ஜீவன்முக்தர்கள் அனுபவிக்கிறார்கள். இந்நிலையே ‘சும்மாயிருப்பது’.

ஜாக்ரத், ஸ்வப்ன, சுஷுப்தி, அவஸ்தைகளிலும் துரீயாவஸ்தையின் ஆனந்தத்தைக் குறைந்த நேரம் அனுபவிக்கலாம். ஆகவே துரீயாவஸ்தையின் நிழல் மற்ற அவஸ்தைகளிலும் உண்டு.

**மனமும் பிராணனும்**

மனத்திற்கும் பிராணனுக்கும் பிறப்பிடம் ஒன்றே. ஆதாவது ஆத்மா. பிறப்பிடம் இதயமானாலும், மனம் மூளையின்பால் செயல்படுகிறது. கண்ணபிரான் மதுராவில் பிறந்து கோகுலத்தில் வளர்ந்தது போல்! பிராணனோ இதயத்தில் பிறந்து உடல் பூராவும் பரந்து நிற்கிறது. நான் எனும் நினைவுதான் அகங்காரம், அகங்காரம் எங்கிருந்து உற்பத்தியாகிறதோ அங்கிருந்துதான் மூச்சும் கிளம்புகிறது. ஆகையால் மனம் அடங்கும்போது பிராணனும், பிராணனடங்கும் போது மனமும் அடங்கும். ஆகவேதான் பிராணாயாமத்தில், பிராணன் அடங்கியிருக்கும் வரையில் மனமும் அடங்கியிருந்து, பிராணன் வெளிப்படும் போது மனமும் வெளிப்பட்டு வாஸனைவயத்தாலும் மனம் சூக்ஷ்ம சரீரம் எனப்படுகிறது. மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தை அனுசரித்தே நிற்கும். பிராணன், மனதின் ஸ்தூல ரூபமெனப்படும். ஆக மனமும் பிராணனும்

சேர்ந்தே சூக்ஷ்ம் சரீரம் அல்லது லிங்க சரீரம் எனவும் சொல்லப்படுகின்றன. உடல் மரிக்குங்கால் மனத்தை அடக்கப் பிராணனை அடக்குவது ஒரு முறை. அதுதான் பிராணாயாமத்தில் செய்யப்படுகிறது. ஆனால் அது தற்காலிகமானது.

## மனமடக்கமே இந்திரியங்களை அடக்குதல்

கடோபநிஷத்தில் மனதைக் கடிவாளமாகவும் இந்திரியங்களை குதிரைகளாகவும் வர்ணிக்கிறார். குதிரைகளைக் கடிவாளம்தான் அடக்குகிறது. எண்ணங்களை வைத்துத்தான் இந்திரியங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றன. அந்த எண்ணங்களை உணடாக்குவது மனமே. ஆகவேதான் மனத்தையுமே 11வது இந்திரியமாகச் சொல்வது உண்டு. மனம் மற்ற இந்திரியங்களை ஆறாம் பயங்கர தேவன். (பீஷ்மோ ஹி தேவ: ஸஹஸோ ஸஹீயான்). யாரொருவர் இந்தப் பயங்கர தேவனை அடக்குகிறாரோ, அவரே தேவதேவன் (வ்யுஞ்யா வசே தம் ஸஹி தேவதேவ:).

## மனத்தின் அடக்கம்

சுருங்கச் சொல்லின், மனம் ஒரு கண்ணாடியின் வேலையே செய்கிறது. ஆத்ம ஜோதி வாசனைகளை நோக்கி பிரதிபலித்தலே. நல்ல மனம், கெட்ட மனம் என்று கிடையாது. வாசனைகள் நல்லனவாக இருந்தால் மனக்கண்ணாடி அவற்றை நல்ல எண்ணங்களாக மூளையில் பிரதிபலிக்கும். உதாரணமாக பரமாத்மாவைப் பற்றிய வாசனைகள் கெட்ட வாசனைகளாக இருந்தால் மனம் அவற்றைக் கெட்ட எண்ணங்களாக பிரதிபலிக்கும். மனத்தின் அடக்கம் என்பது எல்லா எண்ணங்களையும் - நல்லதானாலும், கெட்டதானாலும் - தவிர்க்க வேண்டும்.

அதற்கு என்ன வழி? மனதை வாசனைகள் பக்கம் திருப்பாமல் உள்பக்கமாக அந்தர்முகமாகத் திருப்பி ஆத்மஜோதியைப் பார்த்து அனுபவிக்கும்படி நிலை நிறுத்த வேண்டும். அப்பொழுது வாசனைகள் பிரதி

பலிக்கப்படாததால் எண்ணங்களே எழா. ஆத்ம ஜோதியை, உள்ளுணர்வை, சத்சித்தானந்த உட்பொருளை, மனம் நோக்கியுள்ளதால் ஆனந்தத்தை மட்டுமே அனுபவிக்கும் எண்ணங்களில்லா மனம், உள்ளம் எனப்படும். சிறிது நேரம் மட்டும் மனம் அந்தர்முகமாக இருந்தால், சிறிது நேரமே ஆனந்தம். நிரந்தரமான ஆனந்தம் வேண்டுமானால் நிரந்தரமாக மனம் அந்தர்முகமாக ஆன்மஜோதியின்பால் திருப்பி ஆத்மானந்தத்தை அனுபவிக்கும். ஆனந்தம், வெளியில் இருந்து அடையப் படுவதில்லை. நாம் விரும்பிய பொருள் கிடைத்தாலோ, விரும்பிய ஆசைகள் நிறைவேறினாலோ, மனம் அந்தர்முகமாகத் திரும்பி ஆத்மசுகத்தையே அனுபவிக்கிறது. ஆகவே, சுகத்தை மனதிற்குக் கொடுப்பது உள்ளே ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவே. மனம் எப்பொழுதெல்லாம் வெளியே திரும்பி பஹிர்முகமாக பிரபஞ்சத்தைப் பார்க்கிறதோ அப்பொழுது ஆத்மாவின் சுகம் நின்றுவிடும்.

ஆகவே மனத்தை அடக்க அதை உட்புறமாகத் திருப்பி ஆத்மாவை நோக்கச் செய்யவேண்டும். கிடைப்பது - அதாவது மனம் அடங்கினால் கிடைப்பதே பேரானந்தம்.

**மனத்தை எங்ஙனம் அடக்குவது (பகவானின் உபதேசம்)**

பகவான் ரமணர் கூறும் சுலபமான வழி நான் யார் எனும் விசாரமே. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அகந்தையாகிய போலி நான் கிளம்பும் போதும், பின்பும், அது எங்கிருந்து கிளம்புகிறது என்று நன்மதியால் ஆராய்ந்து அதன் பிறப்பிடமான ஆத்மாவான அஹம் போதத்தை உணர வேண்டும். அதுதான் தான். தான் யார்? தான் தான் இதயக்குகையில் உறைந்திருக்கும் ஆத்மா. அதை உணரும் விசாரத்தில், அகந்தை நான் போய்விடும். எல்லா எண்ணங்களும் மறைந்துவிடும். மனம் ஆத்தாமாவில் லயித்து சுகத்தை அநுபவிக்கும்.

பிராணாயாமத்திலும் மனம் அடங்கும். ஆனால் பிராணனை வெளியே விடும்போது மன அடக்கம்

போய்விடும். சமாதி நிலையில் நிரந்தரமன அடக்கம் ஏற்பட்டு பரமானந்தம் கிட்டும்.

மூர்த்தி தியானம், மந்திர ஜபம், ஆகார நியமம் என்பவைகளும் மனத்தை அடக்கும் சகாயங்களே. மூர்த்தி தியானத்தாலும் மந்திர ஜபத்தாலும் மனம் ஏகாக்கிரத்தை அடைகிறது. மனமானது சதா சலித்துக் கொண்டே இருக்கும். யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் அது எப்படி வேறொன்றையும் பற்றாமல் அதையே பற்றிக் கொண்டு செல்லுமோ அப்படியே மனதையும் ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்தில் பழக்கினால் அதையே பற்றிக் கொண்டிருக்கும். நினைவுகள் அடங்க அடங்க ஏகாக்ரத்தன்மை அடைந்து அதனால் பலத்தை அடைந்த மனத்திற்கு ஆத்மவிசாரம் சுலபமாகச் சித்திக்கும். மிதமான சாத்வீக ஆகார நியமத்தாலும் மனத்தின் சத்வகுணம் விருத்தியாகி ஆத்மவிசாரத்திற்கு சகாயமுண்டாகும். பூரண சத்வமனத்தை ஆத்மாவாகவே கருதலாம் என்று கூட ஒரு கருத்து உள்ளது.

## ஸ்ரீமத் பாகவதத்தில் (பிக்ஷு கீதை)

மேலும், தானம், தனக்கு விதிக்கப்பட்ட தர்மம், யமம் (அஹிம்சை முதலானவை), நியமம் (சுத்தம் முதலானவை), வேதத்தின்படி நடத்தல், விதிக்கப்பட்ட கர்மாக்கள், நல்ல விரதங்கள் ஆகியவையும் மன அடக்கத்திற்கு மிகவும் உதவி செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**“தானமா ஸ்வதர்ம: நியமோ யமஸ்ச**
**சுருதம் ச கர்மாணி ச சுவரதானி**
**ஏதே மனோ நிக்ரஙு லக்ஷணாந்தா:**
**பரோ யோக: மனஸ: சமாதி:”**

ஞானிகள் யோகிகள், ஜீவன்முக்தர்கள் எல்லோருமே ஏதாவது முறையில் மனத்தை உள்முகமாகத் திருப்பி, அடக்கி விடுகிறார்கள். அதனால் அவர்கள் தங்கள் ஆத்மாவின் ஆனந்தத்தை அனுபவித்து ஆத்மாராமர்களாகிறார்கள். மனத்தை அடக்கி இங்கேயே மோக்ஷத்தை, முக்தியை அடைந்துவிட்டார்கள் எனலாம். இதைத்தான் கீழ்க்கண்ட சுலோகம் கூறுகிறது.

**"மன ஏவ மனுஷ்யாணாம் காரணம்**
**பந்தமோக்ஷயோ:"**

*மனமேதான் ஒருவரது மோக்ஷத்தையும் பந்தத்தையும் நிர்ணயிக்கிறது. மனம் எப்படி மோக்ஷத்தை அளிக்கிறது என்று பார்த்தோம். அது எப்படிப் பந்தத்தில் ஆழ்த்துகிறது? மனம் அடங்காமல் வெளிமுகமாக இயங்க இயங்க, ஒருவரது கர்மாக்கள் அதிகமாகிக் கொண்டே போகும். வாசனைகள் கர்மாக்களால் உண்டாகும். வாசனைகள் என்றாலே பந்தம்தான். அவை நிறைவேறாவிட்டால் மறுபிறவியே வாய்க்கும்.*

*உள்நோக்கித் திருப்பப்பட்ட மனது அதாகவே ஆகிவிடுகிறது. அதாகவே என்றால் என்ன அர்த்தம்? "அது" என்பதற்கு வடமொழியில் "தத்" எனும் வார்த்தை. சாந்தோக்ய உபநிஷத்தில் ஸ்வேதகேதுவுக்கு அவன் தந்தை உத்தாலக ஹாருணி உபேதசிப்பது "தத் த்வமஸி". நீ அதுவாகவே இருக்கிறாய்!. "அது" என்றால் பிரும்மம். சந்யாஸம் பெறும்போது குரு, இதை உபதேசிப்பார். "அது" அந்த பிரும்மம் நீதான்! உன்னுள்ளே உள்ள ஆன்மா, பிரும்மம்! உள்ள பொருள் உள்ள உணர்வு (அஹம் போதம்). சத்சித் ஆனந்த ஸ்வரூபம் என்றெல்லாம் கூறப் படுவது அதுவே! ஒருவனது ஸ்வரூபமே பிரும்மம் உன் உள் இருப்பதால், சத் சித் ஆனந்த ஸ்வரூபமே உன் ஸ்வரூபம்!. மன அடக்கத்தால் ஆத்ம ஞானம் ஏற்படும். "தான் யார்" என்ற ஞானம் உண்டாகும், ஞானஸ்வரூபமாக, பிருமமஸ்வரூபமாக மன அடக்கம் செய்பவர் ஆகிவிடுவர்.*

**"பிரும்மவித் பிரும்மைவ பவதி"**

*(பிரும்மத்தை அறிந்தவன் பிருமமாகவே ஆகிவிடுகிறான்)*

*பிறகு*

**"எக்காலத்திலும் ஆனந்தம்!**
**எப்பொழுதும் ஆனந்தம்!**
**எங்கும் ஆனந்தம்!**
**எதிலும் ஆனந்தம்!"**

# வாழவழி காட்டும் வடமொழி இலக்கியங்கள்

## வேத இலக்கியம்

### Dr. ஏ.வி. ராஜகோபாலன்

*பகுதி - 1*

*பல்லாயிரம் ஆண்டுகளாக சம்ஸ்கிருத மொழி பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கும் பாலமாக விளங்கியது. அறிஞர்களின் தினசரி வாழ்வின் சம்பாஷணை, ஆராய்ச்சி, வாத-பிரதிவாதங்கள் என எல்லாமும் இந்த மொழியிலேயே அமைந்தன. கால சக்கிரத்தின் சுழற்சியில், சில சமுதாய பொருளாதார மாற்றங்கள், காரணமாக இந்த மொழி தினசரி பழக்கத்திலிருந்து மறைய ஆரம்பித்தது. இன்றைய சூழலில், சம்ஸ்கிருதம் என்பது பூஜை மற்றும் திருமணம் போன்ற சடங்குகளுக்கு மட்டுமே ஒரு சில புரோகிதர்களால் உபயோகிக்கப்படும் மொழி, என்ற கருத்து பரவலாக இருக்கிறது.*

*இந்த மொழியில் 21ஆம் நூற்றாண்டு மனித வாழ்விற்குத் தேவையான பல உன்னத கருத்துகள் உள்ளன என்பதை விளக்குவதே இத்தொடரின் நோக்கம்.*

*படராக்கோ* (Badaracco Jr) *அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற* Harvard Business School*இல் தொழில் துறை சார்ந்த நெறிமுறைகள்* (Business Ethics) *என்ற துறையின் பேராசிரியர். அவர்* "Leardership through literature" [Harvard Business Review, April 2006] *என்ற கட்டுரையில் நிர்வாக இயல் படிக்கும் மாணவர்கள் இலக்கியங்களைப்*

படிப்பதால் மட்டுமே மேன்மையுற முடியும் என்று வாதாடுகிறார். "ஷேக்ஸ்பியர் போன்ற அறிஞர்களின் நூல்கள் அரிய பல நன்னெறிகளைப் புகட்டுகின்றன" என்பது அவர் வாதம். இதற்குப் பல மேற்கோள்களை அவர் காட்டுகிறார்.

இது இந்திய நாட்டிற்கு மிகவும் பொருந்தும். மற்றெந்த நாட்டைவிட நமக்குப் பழம் பெரும் நாகரீகத் தொடர்ச்சி (cultural continuum) இருப்பது கண்கூடு. பழைய. நாகரீகத் தொட்டில்கள் (cradles of civilisation) பல இன்று சுவடே இல்லாமல் அழிந்து போய் விட்டன. பாபிலோன், மெசபடோமியா, எகிப்து, போன்ற நாகரீகங்கள் தோன்றி மறைந்து போயின. இந்திய நாகரீகம் மட்டும் இன்றும் அழியாமல் சில பல மாற்றங்களுடன், இன்றும் காணக் கிடைப்பது நம்முடைய பெரும் பேறாகும்.

நம் நாட்டு பண்டை இலக்கியங்கள் யாவும் ஸம்ஸ்கிருத மொழியில் அமைந்துள்ளன. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வேதகாலம், ஓர் அழகிய வாழ்க்கை முறையை விளக்கும் கண்ணாடியாக நமக்கு முன்னோர் வாழ்ந்த காலத்தை விளக்கிக் காட்டுகிறது. இது வெறும் மதம் சார்ந்த விஷயங்களை மட்டுமல்லாது பல்வேறு சுவையான கருத்துக்களையும் உரைக்கிறது.

### பெண்ணின் பெருமை

வேத காலத்துப் பெண், மிகவும் போற்றப்பட்டவளாக இருந்தாள். கணவன் வீட்டுக்குச் செல்லும் மருமகள், அங்கு ஆட்சி செய்யும் ஒரு மகாராணியாக இருக்கிறாள். பின்னாட்களில், பல்வேறு சமுதாயக் குழப்பங்களால், ஆண் மேலாதிக்கமும், பெண் கொத்தடிமைத் தனமும் பாரத நாட்டின் தொன்மையான நாகரீகத்தை மறைக்கத் தொடங்கின. ஆனால் வேதம் கண்ட மணப்பெண் புகுந்த வீட்டின் தலைவியாகச் செல்வாள் (ரிக் வேதம் 10.85.26). அவளை மாமனார், மாமியார், நாத்தனார் மற்றும் கொழுந்தனார் இவர்களை ஆளும் "சர்வாதிகாரியாக" (சம்ராஞீ) வேதம் வர்ணிக்கிறது.

*"சம்ராஞீ ஸ்வசுரே பவ*
*சம்ராஞீ ஸ்வஸ்ரவாம் பவ*
*நநாந்தரி சம்ராஞீ பவ*
*சம்ராஞீ அதிதேவ்ருஷு"*

***(ரிக் வேதம் 10.85.26)***

*இது ஒரு சுவாரஸ்யமான விளக்கம். ஒரு கூட்டுக் குடும்பத்தின் மகாராணியாக அப்பெண்ணை ரிக் வேதம் காண்கிறது. (ஸ்வசுரே - மாமனாருக்கு, ஸ்வஸ்ரவாம் - மாமியாருக்கு, நநாந்தரி- நாத்தனார்களுக்கு, தேவ்ருஷு- கொழுந்தன்மார்களுக்கு). இந்த வர்ணனை பெண்ணின் பெருமையை அதி உன்னதமாக பறை சாற்றுகிறது. இது ஸ்லோகத்தின் வெளிப்படையான மொழி பெயர்ப்பு. இதன் சூக்ஷ்மரூபம் இன்னும் விசேஷமாகிறது. அன்பாலும், அரவணைப்பாலும், பண்பாலும், வேறு குடும்பத்திலிருந்து புக்ககம் செல்லும் பெண், அக்குடும்பத்தின் தலைவி ஆகிறாள். தமிழில் அவளை "இல்லக்கிழத்தி" என்று சொல்கிறோம் அல்லவா? அவள் குடும்பத்தலைவி* Home maker *மட்டுமல்ல, அவள்* Home ruler *ஆகவும் இருக்கிறாள். மற்றோர் இடத்தில் ஒரு திருமண ஊர்வலம் வருணிக்கப்படுகிறது. இது சற்றே மாறுபட்ட புரிந்து கொள்ள சிரமமான விளக்கம். பெண்ணின் தோழி "ரைபி" என்கிற அழகிய சம்ஸ்கிருத விருத்தம். எண்ணங்களே அவள் பல்லக்கின் மெத்தைகள். பார்வை (அல்லது தொலைநோக்கு) அவள் கண்ணின் மையாக வருணிக்கப் படுகிறது. விண்ணும் மண்ணுமே அவள் அணிகலன்கள். ((ரிக் வேதம் 10.85.6-7). இது வேதாந்தம் அல்ல. புது வாழ்வை நோக்கிச் செல்லும் பெண் அறிவுடைமை, தொலைநோக்கு, சீரிய சிந்தனைகள், எளிய வாழ்க்கை போன்ற நற்குண நல்லொழுக்கங்களுடன் ஊர்வலமாக நாடறிய கணவின் வீடு நோக்கிச் செல்கிறாள். திருமணம் என்பது போகத்திற்காக ஏற்பட்ட அமைப்பு அல்ல. அது ஒரு சீரிய நல்வாழ்வின் துவக்கம். ஆடம்பரங்கள் அற்ற ஓர் எளிய சடங்கு.*

*வேதங்கள், வெறும் யாகங்களுக்காக புரியாத சம்ஸ்கிருத மொழியில் அமைக்கப் பெற்ற நூல்கள் அல்ல. 21ஆம் நூற்றாண்டிற்கு ஒரு வழிகாட்டும் ஒளி தீபம்.*

மேற்கண்ட ரிக்-மற்றும்-அதர்வண வேதம், காலத்தால் அழியாத ஒரு பொக்கிஷம். பெண் விடுதலைக்கு உலகத்திற்கே ஒரு முன்னோடி. இத்தகைய உயர்ந்த பெண்ணைக் கணவன் தன்னில் பாதியாகக் கருதி போஷிக்க வேண்டும் என்கிற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

**"அர்தே வா ஏஷ ஆத்மனோ யத்பத்னீ"**

**(தைத்ரீய சம்ஹிதை)**

இது பக்தி மார்கத்தில் "அர்த்தநாரீஸ்வர" தத்துவமாகக் காணக் கிடைக்கிறது. இதுவே இல்வாழ்வின் பண்பும் பயனுமாகிறது. இந்த ஆதர்ச இல்லறத்தில் காதலும், பிரேமையும், தர்மமும் இணைந்து ஒரு பிரகாசமான உறவாக அமைகின்றது. இந்த மதுர பாவத்தை "அதர்வ சம்ஹிதை" விளக்குகிறது. "என் இதயத்தில் உன் இதயம் இருக்கட்டும், உன் மனமும், சித்தமும் அவ்வாறே என்னிடம் இருக்க, சக்ரவாக பக்ஷிகளைப் போல நாம் காதல் வசப்படுவோம். உன்னைத் தொடக் காற்றுக்கும், தண்ணீருக்கும் எனக்கும் மட்டுமே உரிமை உண்டு."

"அழகான வர்ணனை, புதிதாகத் திருமணம் செய்பவர்கள் அவசியம் வேதத்தின் இந்தச் சிறந்த மந்திரங்களைப் படியுங்கள்!" என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

## தொழில்

உழைப்புக்கு வேதங்கள் பெரும் முக்கியத்துவத்தை அளித்தன. ஆஸ்திகர்களால் பெரிதும் போற்றப்படும் "ஸ்ரீருத்ரம்" யஜுர் வேதத்தில் உள்ளது. இதில் இறைவனை பல்வேறு தொழில்களைச் செய்பவராகச் சொல்லி "நமோ நம:" என்று போற்றுகிறது. ருத்ரன் - ரதம் ஓட்டும் வீரனாக, கொல்லனாக, குயவனாக, பொம்மை செய்பவனாக, சிற்பியாக, ஸ்தபதியாக - அதுமட்டுமல்ல நாய்களின் தலைவனாகக் கூட வருணிக்கப்படுகிறான். செய்யும் தொழிலே தெய்வம் என்பது வேதம் கண்ட வழி. உறக்கமும், சோம்பலும், வெட்டிப் பேச்சும் என்னை அணுகாது இருக்கட்டும் என்று அவன் வேண்டுகிறான்.

*"மா நோ நித்ரா ஈசத மோத ஜல்பி:"*

*(ரிக் வேதம் 8-48-18)*

*"இறைவன் உழைப்பவனையே நண்பனாகக் கொள்கிறான்" என்கிறது ரிக் வேதத்தின் நான்காம் மண்டலம்.*

## நேர்மை

*நற்குண, நல்லொழுக்கங்கள் பேணிப் பாதுகாத்த காலம், சான்றோனைப் பெரியோன் என்று போற்றி மதித்த காலம், பொருளைவிடப் பண்பே சிறந்தது! என்று கர்வத்துடன் கூரை மேல் ஏறிக் கூவிய காலம் - வேத காலம். நேர்மையான வழியையே நாம் ஒரு போதும் பிறழாமல், சந்திரனும் சூரியனும் விதிமுறைப்படி சுற்றி வருவது போல், என்றும் பின்பற்றுவோம். "ஈவிரக்கம், பெருந்தன்மையும் உடைய சான்றோரையே சார்ந்து வாழ்வோம்" என்பது வேதவாக்கு (ரிக் வேதம் 5-51.15). பிரசித்தி பெற்ற வேறொரு வேத மந்திரம் "மங்களமானவைகளையே நாம் காதுகளால் கேட்போம், சிறந்தவற்றையே கண்களால் பார்ப்போம்!" என்று உயர்வுக்கு ஒரு அளவுகோலை நாட்டுகிறது. இறைவன் சத்தியமே வடிவானவன், இந்தப் பிரபஞ்ச சத்தியம் "ருதம்" என்று வழங்கப்படுகிறது. வேரூன்றி இருக்கும் இந்த "ருதம் அழகுமயமானது, என்றும் நிலைத்து நிற்பது. (ரிக் வேதம் 4-23-9) இதை அனுசரிப்பதிலேயே வாழ்வின் ஆனந்தம் கிட்டுகிறது!" என்று எடுத்துரைக்கிறது.*

*ரிக் வேதத்தின் 10 ஆம் மண்டலத்தில் "சப்த மர்யாதா" என்ற ஒரு உன்னத கோட்பாடு கூறப்படுகிறது. மரியாதை என்பது ஒரு ஆழமான பொருள் பதிந்த சம்ஸ்கிருத சொல். வாழ்க்கையில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய சில வரையறைகள், சப்த மர்யாதா என்று ஏழு நெறிகளாகக் கூறப்பட்டன. இவை பெரும்பாலும் எதிர்மறையான வடிவில், மனிதன் தவிர்க்க வேண்டி, நீதி உபதேசமாக உள்ளன. திருடுதல், மதுபானம், சூதாட்டம் என்பன தவிர்க்கப்பட வேண்டும். விபசாரம், பொய் பேசுதல்*

கூடாது. அஹிம்சையை கடைப்பிடிக்க வேண்டும். இந்த ஆறு எல்லைக்கோடுகளும் முக்கியமானவை. இவற்றுடன் ஒரு (subtle) நுட்பமான ஏழாவது நெறி கூறப்படுகிறது. அது, இத்தகைய பாபகர்மாக்களுக்குத் துணை போகாது இருத்தல் ஆகும்.

வேதகாலத்தை "கிருதயுகம்" என்று வருணிப்பார்கள். அந்தக் காலத்தில் தனிமனிதனின் நேர்மையும் சமுதாயத்தின் நெறிகளும் மிக மிக முக்கியமானதாகக் கருதப்பட்டன. தினசரி பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் - பொது வாழ்விலும் தனி வாழ்விலும் தலைவிரித்தாடும் - பொய்மையைப் பற்றிய விவரங்களையே பார்த்து, பார்த்துச் சலித்துப் போன நம் மனத்திற்கு வேத வாழ்வுதான் எத்தகைய ஆறுதல் அளிக்கிறது!

**மனித நேயம்**

பெண்ணின் பெருமையும், நேர்மையும், உழைப்பும் மாத்திரம் ஓர் உயர்ந்த சமுதாயத்தை அமைத்துவிட இயலாது. மனித குலத்தின் அடிப்படையே உறவுகளும் மனிதநேயமும் ஆகும். அது வேதகாலத்தில் எவ்வண்ணம் அமைந்தது என்று பார்ப்போம்.

1. அறிவற்ற ஒருவன் தனக்காகவே உணவை சேமிக்கின்றான், அது மரணத்திற்குச் சமானமாகும். இதை சத்தியமாக உரைக்கின்றேன். (ரிக் 10-117.6).

2. எந்த மந்திரமும், நண்பனை விட்டுவந்த மனிதனைக் காப்பாற்றாது. (ரிக் 10.71.6)

3. அதர்வ வேதம், குடும்ப நேயத்தை விளக்குகிறது. பசு தன் கன்றை நேசிப்பது போல் ஒருவரை ஒருவர் நேசியுங்கள். மகன் தாய், தந்தையரை நேசிக்கட்டும். மனைவி அன்பு கலந்த மதுரமான வார்த்தைகளையே கணவனிடம் பேச வேண்டும். சகோதர, சகோதரிகளே, ஒருவரை ஒருவர் நேசியுங்கள், ஒன்றுபட்டு ஒற்றுமையுடன், நட்பைப் பேணுங்கள் (அதர்வண வேதம் 3.10).

*4. ரிக் வேதத்தின் கடைசி வரிகள் பொன்னெழுத்தில் பொதிக்கப் பட வேண்டியவை. ஒரு சமூகம் எவ்வாறு ஒன்று கூடி தத்தம் கடமையைச் செய்ய வேண்டும் என்று கூறும் அதி அத்புதக் கவிதை. இன்றைய காலத்தில் கூறப்படும்* Good governance *என்பதின் இலக்கணம் இதுவேயாகும்.*

*ஒன்று கூடுங்கள், அனைவருடனும் கருத்துப் பரிமாற்றம் செய்யப்படட்டும். உங்கள் மனமும், வாக்கும், எண்ணங்களும் நோக்கமும் ஒன்று படட்டும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுங்கள். மனம், இதயம், சித்தம் எல்லாமே ஒன்று படட்டும். அனைவரும் மகிழ்வுடன் வாழ்வோமாக (ரிக் 10-191-2-4).*

*என்னே, ஒரு மனிதநேயம் கலந்த வாழ்வுமுறை.*

*5. இந்தச் சூழலில் வாழும் மனிதர்கள் உலகை எந்தப் பரிமாணத்தில் நோக்கினார்கள் என்பதைப் பார்ப்போம். வேதகாலத்து மனிதன் ஒரு பிரார்த்தனை செய்கிறான்.*

- *அனைவரும் என்னை நண்பனாகவே பார்க்கட்டும்.*

- *நானும் உலகில் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களையும் நட்புறவுடன் பார்ப்பேன்.*

- *நாம் ஒருவரை ஒருவர் நட்புப் பார்வையில் மட்டுமே நோக்குவோம் (யஜுர் 26.2).*

*யஜுர் வேதத்தின் இந்த மூன்று வரிகளில் திரும்பத் திரும்ப வரும் வார்த்தைகள் மித்ரஸ்ய (நட்புடன்), சக்ஷுஷா (கண்ணோட்டத்தில்) மற்றும் சர்வாணி பூதானி (எல்லா உயிரினங்களையும்). ஒரு வார்த்தை மிகையில்லை. இந்த மனித நேயக் கண்ணோட்டமே வேத காலத்தின் மிக உயர்ந்த நாகரீகத்தின் வெளிப்பாடு. இத்தகைய ஒரு வாழ்வாங்கு வாழும் நாளை நாம் காணமுடியுமா?*

*வாழ்க வேத காலம்! வளர்க மனித நேயம்!.*

*வளரும்.....*

# சிவானந்த லஹரி

## அ.வெ. சுகவனேஸ்வரன்

*(46)*

***ஆகீர்ணே நகராஜி காந்தி விபவைருத் யத்ஸுதா வைபவை-***
***ராதௌதேபி சபத்மராகலலிதே ஹம்ஸவ்ரஜைராச்ரிதே।***
***நித்யம் பக்திவதூகணைச்ச ரஹஸி ஸ்வேச்சாவிஹாரம் குரு***
***ஸிதித்வா மானஸ ராஜஹம்ஸ கிரிஜா நாதாங்க்ரி ஸௌதாந்தே।।***

*மனமாகிய ராஜஹம்ஸமே! நீ நகங்களினின்று வீசும் ஒளியால் தீபம் உள்ளதும், சந்திரகலையினால் வெள்ளையடிக்கபட்டதான பத்மராகக்கற்கள் இழைத்தாற் போன்று சிவந்து காணப்படுவதும், பரமஹம்ஸர்கள் என்னும் சிறந்த அன்னப்பறவைகள் நிரம்பியதுமான மலைமகளின் நாதரது திருவடிகளாகிய மாளிகையில் பக்தி எனும் மனைவியாருடன் சாச்வதமாக தன்னிச்சப்படி கூடிக் குலாவுவாயாக.*

*(47)*

***சம்புத்யான-வஸந்த-ஸங்கினி ஹ்ருதாராமே(அ)க ஜீர்ணச்சதா:***
***ஸ்ரஸ்தா பக்திலதாச்சடா-விலஸிதா: புண்யப்ரவால-ச்ரிதா:।***
***தீப்யந்தே குணகோரகா ஜபவச: - புஷ்பாணி ஸத்வானா***
***ஜ்ஞானானந்த ஸுதா-மரந்தலஹரீ ஸம்விதபலா(அ)ப்-யுந்நதி:।।***

*நமது மனமாகிய பூந்தோட்டத்தில் சிவனது தியானமெனும் வஸந்த பருவம் நேரிடுகையில் பாபமெனும்*



பழுத்த இலைகள் உதிர்ந்துவிடும். பக்தியெனும் கொடிக் கூட்டங்கள் சிறந்து பிராகாசிக்கும். புண்ணியமென்னும் தளிர்கள் தோன்றும். நற்குண மென்னும் அரும்புகள் கட்டும். ஜப மந்திரங்களாகிய பூக்களும் மலரும், நறுமணம் வீசும். (நற்கர்ம புண்ய வாஸனை கூடும்). ஞானானந்தமென்னும் அமுதம் போன்ற தேன் பெருகும். ஞானானுபவமாகிய சிறந்த பழங்கள் விருத்தியாகும்.

*(48)*

***நித்யானந்த ரஸாலயம் ஸுரமுனிஸ்வாந்தாம்பு ஜாதாச்ரயம்***
***ஸ்வச்சம் ஸத்த்விஜஸேவிதம் கலுஷ ஹாருத் ஸத்வாஸனா விஷக்ருதம்।***
***சம்புத்யான ஸரோவரம் வ்ரஜ மனோ ஹம்ஸாவதம்ஸ ஸ்திரம்***
***கிம் க்ஷுத்ராச்ரய பல்வல ப்ரமண ஸஞ்ஜாத ச்ரமம் ப்ராப்ஸ்யஸி।।***

மனமென்னும் சிறந்த அன்னமே! ஏன் சிறியோரை அடுத்து நின்று, சேற்றுக்குட்டையில் உழன்று வீணாகக் கஷ்டப்படுகிறாய்? அழிவற்றதான ஆனந்தமென்னும் நீர் நிரம்பியதும், தேவரிஷிகளின் இதயமாகிய தாமரையுள்ளதும், தெளிந்த ஸாதுக்களாகிய பக்ஷிகளினால் நாடப்படுவதும், பாபமென்ற மாசையகற்றி புண்ணியமெனும்

*நறுமணத்தை வெளிப்படுத்துவதுமான சிவத்யானம் என்ற மேலான நீர்நிலையத்தை நிலையான இடமாக அடைவாயாக!*

***(49)***

***ஆனந்தாம்ருத பூரிதா ஹரபதாம்போ***
***ஜாலவாலோத்யதா***
***ஸ்தைர்யோபக்ன முபேத்ய பக்திலதிகா***
***சாகோபசாகான்விதா।***
***உச்சைர்மானஸ காயமானபடலீ மாக்ரம்ய***
***நிஷ்கல்மஷா***
***நித்யாபீ ஷ்டபலப்ரதாபவது மே ஸத்கர்ம***
***ஸம்வர்திதா।।***

*சிவனது ஆனந்தமாகிய அமுத நீரால் வளர்க்கப்பட்டு, பாதபத்மமாகிய பாத்தியில் முளைத்து, திடச்சித்தமெனும் கொழுகொம்பைப் பற்றிக் கொண்டு, பெருங்கிளை, சிறுகிளைகளோடு கூடி, சிறந்தவர்களின் மனமெனும் பந்தலில் படர்ந்து, பூச்சியென்ற குற்றமற்று, நற்செய்கைகளால் நன்கு வளர்க்கப்பட்ட பக்தியெனும் கொடி எனக்கு நிலையான முக்தியென்ற விரும்பத்தக்க பழத்தையளிப்பதாக ஆகட்டும்.*

***(50)***

***ஸந்த்யாரம்ப விஜ்ரும்பிதம் ச்ருதிசிரஸ்தானாந்த***
***ராதிஷ்டிதம்***
***ஸப்ரேம ப்ரமராபிராம மஸக்ருத் ஸத்வாஸனா***
***சோபிதம்।***
***போகீந்த்ராபரணம் ஸமஸ்தஸுமன: பூஜ்யம்***
***குணாவிஷ்க்ருதம்***
***ஸேவே ஸ்ரீகிரிமல்லிகாரஜுன மஹாலிங்கம்***
***சிவாலிங்கிதம்।।***

*மருதமரம் கொள்கையில் இதன் பொருள் வருமாறு -*

*ஸ்ரீ சைலத்தில் பெரியதும், அடையாளமாக உள்ளதும், மங்களமான (கொடியால்) தழுவப்பட்டதும், மாலைத் தொடக்கத்தே மலர்வதும், காதின் மேலும் தலையிலும் அணியக்கூடிய பூவை உடையதும், தேன் வண்டுகள் அன்போடு சூழ் அழகுற்று விளங்குவதும், நல்ல வாஸனையினால் சோபிப்பதும், போகத்தை*

விரும்புவோருக்கு அலங்காரப் பொருள்களைத் தருவதும், எல்லாப் புட்ப மரங்களிலும் மேன்மை பெற்றதும், உயர்ந்த தரமுள்ளதுமான மல்லிகையோடு கூடிய மருதத்தைப் பெற்றிருக்கிறது.

சிவபெருமானுக்குரிய கொள்கையில் இதன் பொருள் வருமாறு -

மாலையின் தொடக்கத்தில் நடனத்தால் களிப்புற்றவரும், வேதமுடியாகிய உபநிடதங்களில் நிலையாகத் தோன்றுபவரும், அன்பு கொண்ட ப்ரமராம்பிகையுடன் விளங்குகிறவரும், எப்பொழுதும் சாதுக்களின் பக்தி மனங் கமழ்பவரும், சிறந்த பாம்புகளை அணியாக அணிந்தவரும், தேவர்களனைவராலும் பூஜிக்கப் பட்டவரும், நற்குணங்களை வெளியிடுபவரும், பராசக்தியால் தழுவப்பட்டவருமான ஸ்ரீ சைலத்தின் மேல் விளங்கும் மல்லிகார்ஜுனர் என்ற மஹாலிங்க மூர்த்தியை இடைவிடாது ஸேவிக்கிறேன்.


ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778
வஸந்தா ராகவன் 9445432335

குரு வெளியிலும் உள்ளார்; உள்ளும்
உள்ளார். வெளியிலிருந்து
மனம் உள்முகமாகும்படி தள்ளுகிறார்.
உள்ளிருக்கும் குரு, மனத்தைத் தன் வசம்
இழுத்து அதனை அமைதியாக வைத்துக்
கொள்ள உதவுகிறார்.

இதுவே குரு கிருபை.

– பகவான் ரமணர்

குரு கிருபையை வேண்டி

R. SELVARAJ
Contractor
P.Quilam Village & Post
Tandarampattu (TK)
Tiruvannamalai Dist

Advt

# ரமண வழித்தலங்கள்

## அறையணி நல்லூர் - கீழூர்

அதுல்யநாதேச்வரர் கோயில் தென்பெண்ணையாற்றங் கரையின் மேல் உள்ள பாறையில் கட்டப்பட்டுள்ள ஒரு அழகான கோயிலாகும். இதில் ஞானசம்பந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட அண்ணாமலையார் சந்நிதியும் உள்ளது. இந்த அறையணி நல்லூர் ஆலயம் தற்போது பகவானின் ஜப்பானிய பக்தர்களால் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடந்தேறியது.

ஞானசம்பந்தப்பெருமான் திருத்தல யாத்திரை வருங்கால் அறையணிநல்லூரை அடைந்தார். அங்கிருந்து தொலைவில் தெரிந்த அண்ணாமலைச் சிகரத்தைக் கண்டார். கண்டதும் கண்ணில் நீர்வழிய, கை கூப்பி, "உண்ணாமுலை யுமையாளோடும் உடனாகிய ஒருவனான" அண்ணாலையாரைப் பாடிப் பணிந்தார். பின்னர் அங்கிருந்த பாறைமேல் வடிக்கப்பட்ட கோயிலினுள் சென்றார். ஒரு பாறைமேல் வடிவமைக்கப்பட்டுள்ள அவ்வூர்க்கோயில் சிறியதாயினும் கவர்ச்சி மிக்கது. அங்குறை யும் இறைவன் அதுல்ய நாதேஸ்வரர் (ஒப்பில்லா நாதர்), இறைவி சௌந்தர்ய கனகாம்பிகை. அங்கே அவருக்குத் திடீரென அண்ணாமலையானின் சோதித் தரிசனம் தெரிந்தது.

நம் ஞானப்பெருமானும் அறையணிநல்லூர் அடைந்தார். கோயிலை சென்றடைந்தபோது இருட்டாகி விட்டது. களைப்பாகவும் இருந்தது. அங்கு அப்பொழுது யாரும் இல்லை. ராஜகோபுரத்திற்கு முன்னால் உட்கார்ந்திருந்தான். கதவு திறந்தது. கோயிலினுள் புகுந்தான். உள்ளே எங்கும் இருட்டு. மண்டபம் ஒன்றில் மட்டுமே விளக்கு ஒன்று எரிந்து

கொண்டிருந்தது. அங்கு உட்கார்ந்தான். ஆழ்சமாதி நிலை பற்றிக்கொண்டது.

1500 ஆண்டுகளுக்குமுன் சம்பந்தப்பெருமானுக்கு சோதியுருவாய்க் காட்சியளித்தான் எம்பெருமான் என்று முன்னரே குறிப்பிட்டிருந்தோம். காலம் மாறினாலும் காட்சி மாறவில்லை. இன்று நமது வேங்கடராமனுக்கும் பளிச்செ‌ன ஒரு சோதியைக் காண்பித்தான் எம்பெருமான்.

கர்பகிருஹத்திருந்து உத்பவமான, கண்ணைக் கூசும் ஒரு சோதி தோன்றி எங்கும் பரவியது. உட்கார்ந்த இடத்தில் இருந்து எழுந்த வேங்கடராமன் இங்கு உறையும் இறைவனின் தோற்றமே இது என்று எண்ணி, இது கர்ப்பகிருஹத்திலி ருந்துதான் வருகிறதா என்று காண அங்குச் சென்றான். ஆனால் அங்கு எவ்வித வெளிச்சமும் இல்லை. எனவே தான் கண்ட சோதி லிங்கத்திலிருந்து வரவில்லை என்று உணர்ந்தான். அந்தச் சோதி எதுவாயிருந்தாலும் அது உடனே மறைந்து விட்டது. மீண்டும் சமாதியில் ஆழ்ந்து விட்டான். பூஜை முடிந்தவுடன் வெளியே செல்லும் சமையல்காரன் ஒருவனின் குரலால் அவனுடைய சமாதிநிலை, கலைக்கப் பட்டது. “யாரது மண்டபத்தில் இருப்பது? வெளியே வா, நான் கதவைப் பூட்ட வேண்டும்” என்றது அக்குரல். வெளியே வந்த வேங்கடராமன் கொஞ்சம் உணவு கேட்டான். “இங்கு உணவு எதுவும் கிடையாது” என்று கடுமையாகப் பதில் வந்தது. “சரி! என்னை இங்கே தங்கவாவது அனுமதியுங்கள்” என்றான். இதைக் கேட்ட கோயில் குருக்கள் “இங்கு யாரும் தங்குவதற்கு அனுமதியில்லை” என்று பதிலிறுத்தார்.

வெளியே வந்த வேங்கடராமன் மற்றவர்களுடன் ஆற்றைக் கடந்து எதிர்கரையில் உள்ள கீழுரை நோக்கி நடந்தான். (கீழூர் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மற்றொரு ஊர்.) அக்கீழூரில் உள்ள சிவன் கோயிலில் இரவு அர்த்தசாம பூஜைக்குப் பிறகு அவனுக்குப் பிரசாதம் கிடைக்கலாம் என்று சிலர் கூறினர். கீழூர் வீரட்டேச்வரர் ஆலயத்தில் நுழைந்தான். அர்த்தசாம பூசை முடிந்து தீபாராதனை ஆயிற்று. கோயில் பட்டர், மேளக்காரன்



ஏனையோர் புறப்படத் தயாராயினர். சமாதி நிலையில் இருந்த வேங்கடராமனை வெளியே புறப்பட்ட கோயில் சிவாச்சாரியார் எழுப்பினார்.

கடும்பசியால் வெந்த சிறுவன் சிறிது உணவுக்காகக் கையேந்தினான். பட்டர் “பிரசாதம் ஏதுமில்லை” என்று பட்டெனப் பகன்றார். இறைவனது திருமேனியைத் தீண்டி நாளும் வழிபடும் அப்பட்டருக்கு இல்லாத இரக்கம் அக்கோயில் மேளக்காரனுக்கு இருந்தது. “என் பங்குப் பட்டைச் சாதத்தை இவனுக்கு அளித்துவிடுங்கள்” என்று பரிவுடன் பகர்ந்தான். ஒருவேளை இந்நிகழ்ச்சி வாயிலாக அதாவது, அறவொலியால் ஆண்டவனை அர்ச்சிக்கும் அர்ச்சகர் உள்ளத்தில் அலட்சியத்தையும், பறையொலியால் பரமனை பக்தி செய்யும் பண்டிதரின் உள்ளத்தில் பரிவையும் படரச் செய்து, தாம் பின்னாளில் சாதி, மத பேதம் போக்கி சாமான்ய மக்கள் வாயிலாக வரும் சோற்றைக்கூட ஏற்று மகிழும் வேற்றுமை பாரா ஏற்றமிகு எழிற்குருவாய் இலங்கப் போவதை குறிப்பாய் குறிப்பிக்க வழிப்பயண நாடகத்திலேயே சுழிபோட்டு வைத்தான் போலும்!

ஆகா! ஒரு பிரம்மஞானியின் பசியாற்றிய விழுப்புரம் உணவுச்சாலை உரிமையாளரும், இம்மேளக்காரனும் என்ன புண்ணியம் செய்தனர்! எத்துணை மாதவம் செய்திருக்க வேண்டும். கையில் கிடைத்த பட்டைச் சாதத்தை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு அருகில் இருந்த ஒரு சாஸ்திரியின் வீட்டிற்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டான். அப்பொழுது ஒன்பது மணியிருக்கலாம்.

அங்கு நீருக்காகக் காத்திருக்கும் பொழுது பசியினாலும் களைப்பாலும் கையிலிருந்த சாதத்துடன் தூக்கத்தில் நடந்த வேங்கடராமன் கீழே விழுந்து விட்டான். கண்ணை விழித்துப் பார்க்கும்பொழுது அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. தண்ணீர் கேட்ட இந்த அழகான சிறுவன் திடீரென்று மயக்கம் போட்டு விழுந்து விட்டான். யார் இந்தச் சிறுவன் என்று அறியும் ஆவலுடன் கூடியிருந்த கூட்டம் அவனைப் பார்த்தது.

விழித்த வேங்கடராமன் கீழே சிந்தியிருந்த சோற்றுப் பருக்கைகளை எடுத்து அதிலிருந்த சில கவளங்களைச் சாப்பிட்டுவிட்டு அங்கேயே தூங்கிவிட்டான். பின்னாளில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்டியும் உணவும் அளித்து அவர்களது ஊனப் பசியை நீக்கிய வேங்கடராமன் அன்று தன்னுடைய வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்குக் கீழே விழுந்த பருக்கைகளைச் சாப்பிட்டான் என்பதைப் படிக்கும் பொழுது யாவரது உள்ளமும் கலங்கும். கீழூர் எனப்படும் அச்சிறிய ஊர் செய்த தவத்தால் நமது ஞான மன்னனாம் வேங்கடராமனும் கண்ணயர்ந்து உறங்கிவிட்டான்.

மறுநாள் காலை 31.8.1896, கோகுலாஷ்டமி தினம். கண்ணன் பிறந்து கோகுலத்தைச் சென்றடைந்த தினம். வேங்கடராமன் திருவண்ணாமலையைச் சென்றடைய இன்னும் இருபது மைல்கள் இருந்தன. கீழூர் வீதியில் மேலும் கீழும் நடந்தான். அவனுக்குத் திருவண்ணா மலைக்குச் செல்வதற்கான பாதையோ, தடமோ தெரியவில்லை. களைப்பும் பசியும் மேலிட்டது. எனவே முதலில் உணவு உண்டுவிட்டுப் பிறகு

ரயிலில் திருவண்ணா மலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தான். ஆனால் ரயில் கட்டணத்திற்கு என்ன செய்வது? கொஞ்ச நேரம் சிந்தித்து விட்டு தன் காதில் இருந்த, கற்கள் பதித்த கடுக்கன்களைக் கழற்றினான். இருபது ரூபாய் மதிப்பு (அக்காலத்தில்) கொண்ட கடுக்கனை அடகு வைக்க வேண்டும். எங்கு யாரிடம் அடகு வைக்கலாம், இதற்கு முன்னால் அடகு வைத்தோ கடன் வாங்கியோ பழக்கம் இல்லை. ஆனால் அதற்கு இப்பொழுது அவசியம் வந்து விட்டது. பசியோ அவனைப் புசிக்கத் தொடங்கியது.

முத்துகிருஷ்ணர் என்ற பாகவதர் வீட்டிற்குச் சென்றான். அவர் யார் என்ன என்பதெல்லாம் அவன் அறியான். மூதாதையர் செய்த அருந்தவத்தால் முத்துகிருஷ்ண பாகவதர் அப்பேறு பெற்றார். பாகவதரிடம் உணவுக்காகப் பிச்சையெடுத்தான். பாகவதர் உள்ளே குரல் கொடுத்துச் சிறுவனுக்கு உண்டியளிக்குமாறு பணித்தார். இல்லத்தரசி பசியால் வாடிய, ஆனால் பிரம்ம தேஜசுடன் உள்ளே நுழைந்த பாலகனைக் கண்டாள். கோகுலாஷ்டமி அன்று அக்கோகுலக் கண்ணனே தன் வீட்டிற்கு வந்துவிட்டதாக எண்ணிக் குதூகலித்தாள். நமது பால அண்ணாமலையார் முன் ஒரு அன்னமலையையே வைத்து அன்புடன் உபசரித்தாள் அந்த அன்னபூரணி. அப்பொழுது அந்த வீட்டிலிருந்தது பழைய சாதம் மட்டும்தான். ஒரு கவளம் உண்டவுடன் அவனுடைய பசி அடங்கிவிட்டாலும் மேலும் சாப்பிடும்படி அவனை வற்புறுத்தினாள். சாப்பிட்டபின், பாகவதரிடம் சென்றான். சந்தேகத்திற்கு இடம் கொடாதவாறு தான் உடைமைகளுடன் பயணம் செய்ததாகவும். ஆனால் வழியில் எவ்வாறோ அது காணாமல் போய்விட்டதாகவும், எனவே தனது யாத்திரையைத் தொடர தனது கடுக்கன்களை வைத்துக் கொண்டு நான்கு ரூபாய் கொடுக்கும்படியும் பாகவதரிடம் கேட்டான். அந்தக் கடுக்கன்களை வாங்கிய பாகவதர் அவை உண்மையான தங்கத்தால் செய்யப்பட்டதென்றும் அவற்றில் உள்ள கற்கள் விலையுயர்ந்தன என்றும் அறிந்து அவனுக்கு

நான்கு ரூபாய் கொடுத்து அவனுடைய விலாசத்தைக் குறித்துக் கொண்டு தன்னுடைய விலாசத்தையும் ஒரு துண்டுப் பேப்பரில் எழுதி அவனிடம் கொடுத்தார்.

பாகவதரும் அவருடைய மனைவியும் வேதத்தில் கூறியபடி எல்லா விருந்தினர்களும் இறைவனே என்ற நம்பிக்கை கொண்டவர்கள். மேலும் பாகவதரின் மனைவிக்கு உள்ளுணர்வு என்ன உரைத்ததோ, தெரியவில்லை. ஒருவேளை வீடு வந்து வீற்றிருப்பவன் வீடுபேறு தரவல்ல விமலன் என்பதை உணர்ந்திருப்பாள் போலும்! எனவே சாப்பாடு கொடுத்தது மட்டுமல்லாமல் கிருஷ்ணனுக்கு படைப்பதற்காகச் செய்த இனிய பட்சணங்களை, படைப்பதற்கு முன்பே சாத்திர சம்பிரதாயங்களை வெட்டிவைத்து சட்டென ஒரு பொட்டலம் கட்டிவைத்து பாரிலுள்ள பக்தர் பலரின் வாழ்வின் காரிருள் போக்கி காத்தருள வந்த கற்பக குருரமணனாய் இன்னும் சில மணி நேரங்களில் ஞாலம் உய்யக் கோலம் கொள்ளப்போகும் அப்பாலகனின் பசும்பொன் கரங்களில் பாசமுடன் இட்டு வைத்தாள். வேங்கடராமன் மீண்டும் வந்து அவனது கடுக்கன்களை மீட்டுக் கொள்வதாக உறுதி அளித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

ஆனால் வீட்டை விட்டு வெளியே வந்தவுடன் முத்துகிருஷ்ணர் எழுதிக் கொடுத்த முகவரித் தாளைச் சுக்குநூறாகக் கிழித்து எறிந்து விட்டான். விலை உயர்ந்ததாக இருந்தாலும் கடுக்கன்களை மீண்டும் எடுப்பதை அறவே வெறுத்தான். தோடுடைய செவியனாய் வீடேறிய விமலன் தோடுதிர்ந்த செவியனாய் வெளியேறினான். பக்ஷணப் பொட்டலத்துடன் நாலு ரூபாய் பணத்தோடு திருக்கோவிலூர் ரயில் நிலையத்திற்கு வந்து அங்கேயே இரவை உறங்கிக் கழித்து மறுநாள் செப்டம்பர் முதல் தேதி நாலணாவுக்கு திருவண்ணாமலைக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு அதிகாலை அங்கு வந்த ரயிலில் ஏறி திருவண்ணாமலைக்குப் பயணமானான். ரயிலில் வரும் அவனை வரவேற்க மனிதர்கள் மறந்தாலும் மரங்களைக் கொடிக்கம்பங்களாகவும் இலைகளைக்

கொடிகளாவும் அமைத்து இயற்கை அவனை இன்முகத்துடன் வரவேற்றது.

வரும் வழியில் வண்டி ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கடக்கும்பொழுது அண்ணாமலையார் திருக்கோயில் கோபுரங்களையும், நெடிதுயர்ந்த அண்ணாமலையையும் ஒருங்கே கண்டிருப்பான்.

தாம் பிறந்து வளர்ந்த சூழலையும் சுற்றத்தையும் துறந்து தமது நிரந்தர நிலமாம் நிகரிலா அருணையை நோக்கி பெரும்பயணம் செய்த நம் பெருமானை, இல்லத்திலிருத்தி இன்னமுது அளிக்கும் பேற்றினை முதலில் பெற்ற முத்துகிருஷ்ண பாகவதரின் குடும்பம் கொடுத்து வைத்த குடும்பமல்லவா!

பகவானுக்கு அன்று உணவு படைத்த பாகவதரின் மனைவி பிற்காலத்தில் பகவான் விருபாக்ஷி குகையில் வீற்றிருக்கையில் அவரை வந்து பார்த்துச் சென்றார். (பாகவதரின் வீட்டில் ரமண திருவண்ணாமலை விஜய நூற்றாண்டையொட்டி பகவானின் படம் வைக்கப்பட்டு அங்குக் குறிப்பும் காணப்படுகிறது. இவ்வாறே விழுப்புரம், மாம்பழப்பட்டு, திருக்கோவிலூர் மற்றும் திருவண்ணாமலை இரயில் நிலையங்களிலும் ரமண விஜயத்தைப் பற்றிய குறிப்பு பதிக்கப் பெற்றுள்ளது. இதேபோல், அவர் சோதி தரிசனம் கண்டு அண்ணாமலையானை முதன்முதலில் தரிசித்த அறையணிநல்லூர் திருக்கோவிலிலும் ஒரு குறிப்பு காணப்படுகிறது).

**உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்**
**உன்னைக் கண்டு எல்லாம் உன்னுருவாய் - அன்னியம்இல்**
**அன்புசெயும் அன்னோன் அருணாசலா வெல்கும்**
**இன்புருவாம் உன்னில் ஆழ்ந்தே.**

*அருணாசலா! உன்னையே கதியாக நினைத்து -*
*யாவற்றையும் உன்னிடத்தில் ஒப்படைத்து -*
*தூய்மையான உள்ளத்தினால் எல்லா நேரத்தும் -*
*காணக்கூடிய அனைத்தையும் -*
*உன் சொரூபமாகக் கருதி -*
*உனக்கு அன்னியமாக எதையும் உணராது -*
*அன்பு செலுத்தும் உத்தம பக்தன் -*
*இன்பமே உருவான உன்னிடத்தில் ஆழ்ந்து -*
*பேரின்ப நிலை அடைவான்.*

*- ரமணர் அருளிய அருணாசல பஞ்சரத்னம்*

# பேரின்ப நிலை வேண்டி

B.Rajagopalan
Lalgudi

Advt

# அன்பரின் மடல்

B.R. குமார்.
முன்னாள் துணைத்தலைமை இயக்குனர்
ப்ரஸார பாரதி

அன்புடையீர், நமஸ்காரம்

அக்டோபர் ரமணோதயத்தில் தங்கள் ஆசிரியர் உரை - "வினா நின்ற பின் விடை" - அதி அற்பதுமாக உள்ளது. அறியாமை, அறிவுடைமை ஆகியவற்றை எளிமையான முறையில் விளக்கியுள்ளது அருமையினும் அருமை! Superb indeed! Hats off to you! keep it up!

மனித வாழ்க்கையில், நீண்ட நெடுங்காலமாக, அறியாமைக்கும், அறிவுடைமைக்கும் இடையே, போர் நடந்து கொண்டே இருக்கிறது. மஹாபாரதம் உள்பட! இதில் வெற்றி பெற்றவர்கள் ஒரு சிலர்! தோல்வியடைந்தவர்கள் ஏராளம். தங்கள் கட்டுரையையே மேலும் விரித்து, ஒரு புத்தகமாக வெளியிட வேண்டுகிறேன். தங்கள் சீரிய கருத்துக்கள் பல்லோராலும் ஏற்கப்படும் என்பது உறுதி.

மீண்டும் நமஸ்காரங்களுடன்

தங்கள் அன்பன்,

குமார்.

**முன்அட்டைப்பட விளக்கம்**

பகவானின் தாயார் அழகம்மையின் சமாதி வைபவத்திற்குப் பின் பூஜைக்காகவும் அபிஷேகத்திற்காகவும் தீர்த்தம் அருகிலிருந்த பலாக்கொத்திலிருந்து கொண்டு வருவது வழக்கம். ஒருமுறை மழைக்காலத்தில் மழை நின்ற சமயம் தாயாரின் சமாதிக்கருகில் சமாதி கட்டுவதற்கு மண் எடுத்த இடத்தில் நீர்வற்ற ாமல் தெளிந்து சுத்தமாக தேங்கி இருந்தது. அதைக் கண்ட சின்னஸ்வாமிகளும் சின்ன ராமநாதனும் அதிலிருந்த ஜலத்தை இறைத்தார்கள். அங்கு ஊற்றுப் பெருக்கெடுத்து வந்தது. அதை பகவானிடத்தில் காண்பிக்க பகவான் அந்த ஊற்றை ஆழப்படுத்தக் கூறினார். அதுவே வற்றாத ஜீவ தீர்த்தமாக இன்றும் ரமணாச்ரம ஆலயங்களின் அபிஷேகத்திற்குப் பயன்படும் கிணறாக விளங்குகிறது. இது இங்குள்ள ஆலயங்களில் ஈசான்ய மூலையில் அமைந்துள்ளது தனிச்சிறப்பாகும்.

**பின் அட்டைப்பட விளக்கம்**

தாயார் சந்நிதியில் அழகும் அருளும் கொஞ்சும் வண்ணம் வேறெங்கும் காண இயலாத அரிய சிவகாமியம்மை உடனாகிய நடராஜரின் பொலிவுத் தோற்றம்.

# செய்திகள்


## 131-வது ஜயந்தி விழா

### திருவண்ணாமலை

*பகவான் ஸ்ரீ ரமணமகரிஷிகளின் 131 வது ஜயந்தி விழா 23-12-2010 அன்று சிறப்பாக கொண்டாடப் பெற்றது.*

*சிறப்பு அபிஷேகம், வேதபாராயணம், ஓதுவார்கள் இசையுடன் திருவாளர்கள் இளையராஜா, ஸ்ரீராம் பார்த்தசாரதி மற்றும் டாக்டர் சாரதா ஆகியோரின் இசை ஆராதனையுடன் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்ற ஜயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது. விழா நேரம் முழுவதும் இடையிடையே கட்டிமேடு திரு. பிச்சையப்பா சகோதரர்கள் நாதஸ்வர இன்னிசையை வழங்கினர்.*

*மாலை திருவாளர் மும்பாய் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இசை நிகழ்ச்சியும் இரவு திருமதி சக்குபாய் ஸ்ரீநிவாசன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. முன்னதாக 22-12-2010 அன்று இரவு ரமண மகரிஷி சென்டர் பார் லேர்னிங் குழுவினர் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. திருச்சுழியிலும் மதுரையில் ஜயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*



## ரமண கேந்திரம்
## சென்னை

*ரமண பகவானின் 131-வது ஜயந்தி விழா 23-12-2010 அன்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது. மஹான்யாச ஏகாதச ருத்ராபிஷேகம், ரமண சஹஸ்ரநாமம் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய விழா மாலையில் ரமண பஜன் (ஆண்டவன் பிச்சை குழுவினர்), ரமண அமுதம் ஹரிகதை (திருமதி. சியாமளா ராமச்சந்திரன்) மற்றும் ரமண பகவானின் திருவுருவ வீதிஉலா (மயிலை மாடவீதிகளில்) என சிறப்பாக ரமண கேந்திரத்தில் கொண்டாடப்பட்டது.*

*2-1-2011 அன்று ரமணரின் 131-வது ஜயந்தி விழா தேசிய சிறப்பரங்கமாக தேனாம்பேட்டை தத்வலோக அரங்கத்தில் சிறப்பு வைபவமாக மதியம் முதல் வேதபாராயணத்துடன் துவங்கப்பட்டது.*

*திருவாளர்கள் வே.சு. ரமணன், தலைவர், ரமணாச்ரமம் திரு. கிரேஸி மோகன், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், பிரின்ஸிபால் (ஓய்வு), சமஸ்கிருதக் கல்லூரி, சென்னை திரு. டாக்டர் எஸ். ராம்மோஹன், ஆசிரியர், ரமணோதயம், டாக்டர். எஸ். ராமகிருஷ்ணன், சங்கரநேத்ராலயா, சென்னை மற்றும் திரு. டி.ஏ. வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். திருமதி கௌசல்யா சிவக்குமார் குழுவினர் இசையுரையாற்ற விழா சிறப்பாக முடிவுற்றது.*

## ஸ்ரீரமண சத்சங்கம்,
## நங்கைநல்லூர், சென்னை

*26-12-2010 அன்று ஸ்ரீவரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் 131வது ரமண ஜயந்தி விழா வேதபாராயணத்துடன் பள்ளி மாணவிகள் அக்ஷரமணமாலை இன்னிசைக்க சிறப்பாக துவக்கப்பட்டது.*

*சுத்தானந்த ஆச்ரமத்தைச் சார்ந்த ஸ்வாமி ஈஸ்வரானந்தா அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். விழா முடிவில் திரளாக கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரஸாத போஜனம் அளிக்கப்பட்டது.*

## ரமண சத்சங்கவேதி, கிழக்குத் தாம்பரம்

*23-12-2010 அன்று பகவான் ஜயந்தி விழா திருமதி. திருவேணி அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்ற அக்ஷரமணமாலை பாராயணத்துடன் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அன்று மதியம் நியூ லைப் அநாதை அஸ்ரமத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.*

## புத்தக வெளியீடு - அக்ஷரமணமாலையில் திருப்புகழ் மலர்கள்

*7-11-2010 அன்று ரமணோதயம் இதழில் திருமதி. சாந்தா சுந்தரராஜன் தொடராக எழுதிய* ***அக்ஷரமணமாலையில் திருப்புகழ் மலர்கள்*** *என்ற கட்டுரைத் தொகுப்பு புத்தக வடிவில் முருகன் திருவருட் சங்கம் சார்பில் கந்தர் சஷ்டி விழா வெளியீடாக அருள் இசை மணி திரு. எஸ்.வி. சுப்ரமணியம் தலைமையில் ரமணோதயம் ஆசிரியர் திரு. ராம்மோஹன் அவர்கள் சிறப்புரையாற்ற சென்னையில் வெளியிடப்பட்டது.*

*விழா துவங்கும்முன் கொட்டித் தீர்த்த மழை, பகவானின் அருளால் அனேகர் திரளாக கலந்து கொள்ளும் வண்ணம் ஓய்ந்தது குறிப்பிடத்தக்கது.*

## சென்னை ரமண கேந்திராவில் கார்த்திகை மாத கனபாராயணம் மற்றும் கிரம பாராயணம்

*கார்த்திகை மாதம் 1-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரை ஒவ்வொரு நாள் மாலையிலும் பத்து கனபாடிகள் வேத பாராயணம் செய்ய பகவானுக்கு கனபாராயணமும் கிரம பாராயணமும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து விமரிசையாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.*

## சென்னை கேந்திரம், பழனி

*31-12-2010 அன்று மாலை பழனி சண்முகபுரம், சாய்சதனில் பகவானின் ஜயந்தி விழா சிறப்பு சொல்லரங்கத்துடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

*பகவான் ரமணர் தம் வாழ்வில் பெரிதும் உபதேசித்தது அன்பு வழியிலா ? ஞானநெறியிலா? என்ற சொல்லரங்கத்துக்கு திருமதி ராஜம்மாள் சங்கரன் தலைமை தாங்கினார். நிறைவாக தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.*

## ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*23-12-2010 அன்று ஸ்ரீரமண கேந்திரத்தினரால் இங்கு பகவானின் ஜயந்தி விழா மாலை 5 மணி முதல் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சபா நடேசய்யர் பள்ளி மாணவர்கள் பகவானின் திருவுருவப் படத்தை வீதிவுலாவாக கொண்டு சென்றது சிறப்பு அம்சமாகும்.*

*சிவஸ்ரீ பரானந்த மஹாராஜ் முன்னிலை வகிக்க, சிவஸ்ரீ ஞானானந்தமஹாராஜ்மற்றும்சிவஸ்ரீபொ.சந்திரசேகரன்ஆகியோர்கள் சிறப்புரையுடன் சிறப்பாக விழா நடைபெற்றது.*



***இருந்தொளிர் உனை அறிவு உறுத்திடர்க்கு என்றே***
***இருந்தனை மதந்தொறும் விதவித உருவாய்***
***இருந்து ஒளிர்உனை அறிகிலர் எனில் அன்னோர்***
***இரவியின் அறிவு அறு குருடரே ஆவர்.***

*அருணாசலா!*

*எங்கும் சத்தாகவும் சித்தாகவும் இருந்து விளங்கும்*
*பரம்பொருளே!*
*உனது உண்மையை அறிவித்து*
*உணர்த்திடுவதற்கு என்றே ஒவ்வொரு மதத்திலும்*
*நீ ஒருவனே பலவிதமான உருவாய்*
*தோற்றமளிக்கிறாய்*
*இவ்வாறு இருந்து பிரகாசிக்கும் உன்னை*
*அறிந்து கொள்ளதவர்கள்*
*சூரியன் இருப்பதை அறிந்து கொள்ள முடியாத*
*பிறவிக் குருடர்கள் ஆவர்.*

*- ரமணர் அருளிய அருணாசல அஷ்டகம்*

**அருணாசலனை வேண்டி**

Railone Projects Pvt. Ltd.,
HYDERABAD

Advt

* பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினாலும் அவர்களை வெறுத்தல் ஆகாது. விருப்பு, வெறுப்பு இரண்டும் வெறுக்கத் தக்கன.

* பிரபஞ்ச விஷயங்களில் அதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமானவரையில், அன்னியர் காரியத்தில் பிரவேசிக்கக் கூடாது. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான்.

– பகவான் ரமணர்


**பகவான் அருள் வேண்டி**

**பதம் பணியும்...**

L. Vijayalakshmi
No. 1/A, Rajamanikkam St.,
West Shanmugapuram Colony,
Villupuram - 605 602

Advt

# ரமணோதயம் காப்பு நிதி
# தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| V. கோபிநாதன், கோட்டூர், சென்னை | 5,000 |
| N. பாலகிருஷ்ணா | 1,000 |
| பரத்வாஜ் B. கமலாஸினி | 1,000 |
| P. சாந்தி, ஆவடி, சென்னை | 1,000 |
| R. பாஸ்கரன், மேற்கு மாம்பலம், சென்னை | 1,000 |
| T.R. கிருஷ்ணமூர்த்தி, மந்தவெளிப்பாக்கம், சென்னை | 1,000 |
| K.M.S சுப்ரமணியன், கோவை | 1,000 |
| N. ரமணன், மதுரை | 500 |
| K. சுப்ரமணியம், நங்கைநல்லூர், சென்னை | 10,000 |
| V. சுப்ரமணியன், காமராஜபுரம், சென்னை | 500 |
| R. ரவிச்சந்திரன், பெங்களூரு | 1,000 |
| ஸ்ரீமதி பத்மாவதி, BSNL மதுரை | 500 |
| டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன், நடேசன் நகர், சென்னை | 1,000 |
| இந்திரா சாஸ்திரி, அண்ணாநகர், சென்னை | 500 |
| K. நடராஜன் IAS., திருப்பூர் | 1,000 |
| I.P. ஹரன் சுதா ஹரன், பெங்களூரு | 500 |
| S.G. சுப்ரமணியன், அடையார், சென்னை | 500 |
| N. ரஞ்சன், அடையார், சென்னை | 1,000 |
| சர்மராஜன், ஆஸ்திரேலியா | 2,000 |

## ரமணோதயம் சந்தா விவரம்

ஆண்டு சந்தா - ரூபாய் 75
ஐந்தாண்டு சந்தா - ரூபாய் 350
ஆயுள் சந்தா - ரூபாய் 1500

காசோலை/மணியார்டர் அனுப்ப வேண்டின்:

**ரமண கேந்திரா டிரஸ்ட் - ரமணோதயம்**

என்ற கணக்கிற்கு ரமண கேந்திரா டிரஸ்ட், 20/40 அலமேலுமங்காபுரம், சென்னை - 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | | 24611397 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **கூடுவாஞ்சேரி** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **பெசன்ட் நகர், அடையார்** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **குரோம்பேட்டை** K.L. சங்கர் | .......... | 22233432 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **அண்ணாநகர்** U.V. பானு | .......... | 26287809 |
| **புதுச்சேரி** M.S. சந்திரசேகரன் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |

---

**Ramanodhayam** - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. **RNI NO.: TNTAM/2001/5542**

**Printed and Published by: A. Kumar Raja,** 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of **Ramana Kendra Trust**, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

**Editor: Dr. S. Ram Mohan**

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.